20 காசு

# காஞ்சி

17-8-69 நிறுவனர்: அண்ணாதுரை

6/5

## உள்ளே....

★

எரிகிற தழலில்....!
(தம்பிக்கு மடல்)

22-வது விழா?
(தலையங்கம்)

மனித உள்ளம்
(சிறுகதை)

வங்கச் சம்பவம்-
ஒரு பிரச்னை?

கிரி-ஒரு
கம்யூனிஸ்டு?

முகப்பில்:
மாண்புமிகு
என். வி. நடராசன்,
பிற்பட்டோர் துறை அமைச்சர்
அவர்கள்



# நண்டின் ஊடல்...!

—கோ. தாமு—

அழகு மலர்க்காடு அது! நடுவிலோர் தண்புனர் தடாகம்! அந்தப் பொய்கையில் கவின்மிகுக் கமலமும், எழில்மிகு ஆம்பலும் நிறைந்திருந்தன! ஆங்கோர் ஆம்பல் மலரில் நண்டிரண்டு பன்னெடு நாட்களாய் இல்லறத்தை இனிது நடாத்தி வந்தன. அலவன் என்பது ஆண் நண்டு; நள்ளி என்பது பெண் நண்டு!

நாட்கள் ஓடின—

பருவங்கள் விரைந்தன—

நள்ளி சூல்கொண்டது! அதற்கு வேட்கைப் பலவாய் விளைந்தன. தேனைப்பருகிட நள்ளிக்கு நனிவிழைவுப் பெருகிற்று! காதலியின் கருத்தினை ஓர்ந்த அலவன் எவ்வகையேனும் தேனைக் கொணர்ந்து நள்ளியின் வேட்கையைத் தீர்க்க முடிவு கொண்டது.

பொய்கையில் ஓரிடத்தே பூத்து நின்ற கமலமலர் ஒன்றைக் கண்ணுற்று, அதனைச் சார்ந்தது! அம் மலரில் நிறைந்திருந்தத் தேனைப் பருகிற்று. அவ்வாறு பருகிய தேனை விரைந்து தன் மனையாளுக்கு ஈந்திட மலரைவிட்டு வெளியேற எண்ணியது! ஆயின் அதனுல் இயலவில்லை! மதுவுண்ட மயக்கம்! அலவன் அசைவின்றி அங்கேயே இருந்தது!

அந்திநேரம் வந்தது! ஆதவன் மேலை வானில் மறைந்தனன்! கங்குல் எங்கும் சூழ்ந்தது!

இப்போழ்து—

அலவனின் மயக்கம் தீர்ந்தது; நள்ளியின் நினைவு வந்துற்றது! பூவினைநீங்கி வெளிவர விழைந்தது! ஆயின் தாமரைப் பூவின் இதழ்கள் மூடிக்கிடந்தன! வெளிவர வழியில்லை! தனக்குக் கள்ளீந்த கமல மலரை சிதைக்கவும் அலவனுக்கு எண்ணமில்லை! ஆகவே, அன்றிரவு முழுவதும் அலவன் அங்கேயே கிடந்தது! எனில்—அதன் துயரம் அளவிடற்கரியதாய் இருந்தது. அலவனைப் பிரிந்த நள்ளியோ தனது துணைவனின் வருகைக்காகக் காத்துக் கிடந்தது.

இரவு நீங்கியது:—

பொழுதுப் புலர்ந்தது—

கீழ்வானில் பகலவன் தன் பொற் கதிர்களை புவிமிசை விரித்தான்!

மூடியிருந்த தாமரைப் பூவிதழ்கள் மெல்ல விரிந்தன! இரவெல்லாம் அடைப்பட்டுக் கிடந்த அலவனும் மலரைவிட்டு வெளியேறி தனது இல்லம் நோக்கி விரைந்தது! கணவனைக் காணுது தவித்தது நள்ளி! இரவு முழுவதும் வழிமீது விழிவைத்துக் கிடந்த நள்ளி, தூரத்தே வருகின்ற அலவனைக் கண்டதில் பேருவகையுற்றது! அலவன் நள்ளியை மிக நெருங்கிக் கொண்டிருந்தது! ஆனல்—அதன் உடலிலே என்ன வண்ணம்! அதன் கண்களிலே ஏனிந்த அசதி...! ஓ...நள்ளிக்குப் புரிந்துவிட்டது. கள்ளுண்டதாலே அலவனின் மேனியில் படிந்திருந்த பூந்தாதையும், கண்களிலே தெரிந்த களைப்பையும் கண்ட நள்ளியின் உள்ளத்தில் ஐயமும், அழுக்காறும் ஒருங்கே மூண்டன! "தேனைத் தேடிச் சென்ற தன் கணவன் இரவு முழுதும் எங்கோவொரு பரத்தையின் இல்லில் தங்கி வருகின்ருன் போலும்" என்று நள்ளி ஐயமுற்றது! அதனுல் துயரமும் ஏமாற்றமும் பொங்கிவந்தன! அதனுலே அதற்கு ஊடல் மிக முற்றியது! விரைந்து தனது இல்லக் கதவை மூடிக் கொண்டது! அஃதாவது — ஆம்பலின் இதழ்கள் குவிந்து கொண்டன!

கதிரவனைக் கண்டு கமலம் மலர்வதும் — நிலவைக் கண்டு குவிதலும்,—பகலவன் வருகையால் ஆம்பல் குவிதலும் இயற்கை நியதிகள்! ஈண்டு, தான் கண்ட இக்காட்சியினை இனியதொரு நாடகமாக்கிக் காட்டியுள்ள — கவிஞரின் விந்தை மிகுக் கவிதைத் திறனை நீங்களும் சற்றுச் சுவையுங்கள்! இதோ— அந்த இனிய வரிகள்;......

"பள்ளிக் கமலத் திடைப்பட்ட
பகுவாயலவன் முகம் நோக்கி
நள்ளி யூடும்."

—திருமங்கையாழ்வார்.

★

---

உரைகல்

## வைர மூக்குத்தி

ஆசிரியர்: ஆலந்தூர்மோகனரங்கன்
வெளியீடு: வசந்தா பதிப்பகம்
விற்பனை உரிமை; பாரி நிலையம், சென்னை-1 விலை ரூ. 1—50

வைர மூக்குத்தி, இன்பப் பெருவாழ்வு, காதல் வாழ்க! காதலர் வாழ்க, கலையும் சிலையும் என்ற நான்கு கவிதை நாடகங்களைக்கொண்ட நூல் இது. தமிழ்த் தாய்க்குச் சூடப்பெற்ற நான்கு முத்தாரங்களாகக் காட்சி தருகின்றன. மருமகளுக்கு வைர மூக்குத்திப் போடாததால் வாட நேர்ந்த பெண்ணைப் பெற்றவர்களின் வாட்டம் நாடெங்கும் விரவிக் காணப்படுவது தான்! ஒவ்வொருவருக்கு ஒவ்வொரு வகை வாட்டம். ஆனுல் மலர்க்கொடியைப் பெற்றவர்களுக்கு? இன்பப் பெருவாழ்வு எது? என்றுத் தேடித் தவித்து அலையும் எழிலனுக்குக் கிடைக்கின்ற பதில் ...... தரும் விளக்கம், துறத்திலிருப்போன் தரும் ஓவியம், வாழ்வைத் துறந்த துறவியின் போதனை அனைத்துமாக வாழ்க்கையின் படிக்கட்டுகளைச் சுட்டிக் காட்டுகின்றன அந்தப் பதிலில்! காதல், காதல் என்று அலையும் புதுமையுகம்! காதலிப்பது என்பது எவ்வளவு எளிதாக இருக்கிறதோ, அவ்வளவு எளிதாகக் கைபிடிப்பது இல்லை! பொங்கலுக்காக புத்தாடை எடுக்கப்போய், அதன் மூலம் காதல் சக்தியைப் புரிந்துகொண்ட மாணிக்கத்தின் தந்தை உண்மையிலேயே மனிதர்தான்! கலையும் சிலையும் நாலுக்கே சிகரமாய் அமைந்திருக்கிறது. கலைஞனது நெஞ்சத் தடத்தை நிரப்பிக்கொண்டவளது எழிலுருவம் சிலையாகிவிட்டதும், கண்டவள் கனல் உமிழ்வதும் உடைந்த சிலைக்கு உயரிய பரிசு கிடைப்பதும் கலைஞரின் நெஞ்சை நமக்குப் புலப்படுத்திக் காட்டுகின்றன. நாடகங்கள் அனைத்தும் தூய எளிய முறையில் ஆக்கப்பெற்றிருக்கின்றன, நல்ல அணி!

—'மு.'

காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

மலர் 6 | 17—8—69 | இதழ் 5

# 22-வது விழா?

இந்தியத் துணைக்கண்டம் சுதந்திரமடைந்துவிட்டதாகப் பிரகடனப்படுத்தப்பட்டு, அதன் பின்னர் ஒவ்வொரு ஆகஸ்ட் 15ம் நாளையும் சுதந்திர நாள் என்று விழாக் கொண்டும் வகையில், இதுவரையில் 22 விழாக்களைச் சந்தித்திருக்கிறது நாடு.

கடந்த 21 சுதந்திர நாள் விழாவினையும்விட, 1969ம் ஆண்டு சுதந்திர நாள் விழாவான 22-வது விழா, இதுவரையில் இந்திய நாடு சந்திக்காத பல பேரதிர்ச்சிகளையும், பெருங் கொடுமைகளையும், இதய நோய்களையும், உள்ள அதிர்ச்சிகளையும், சந்திக்க வேண்டியிருக்கும் இரங்கத்தக்க நிலையினை யடைந்திருக்கிறது என்பதனை எவராலும் மறுக்க முடியாது. இதே வேளையில் இந்த 22-வது விழா, இரு பெரும் முக்கியத்துவமிக்க நிகழ்ச்சியினையும் தன்னகத்தே கொண்டு மிகச் சிறப்புக்குரிய விழாவென்ற பெருமையினைப் பெறவேண்டிய நிலைபெற்றது என்பது பற்றி எவரும் எண்ணிச் செயல்பட்டதாகவோ, செயல்படுவதாகவோ தெரியவில்லை.

இந்தியத் துணைக்கண்டம் வெள்ளை ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற்றதற்கும், பிரிட்டனைப் பொறுத்தமட்டில் அஸ்தமிக்காத சூரியன் என்று கருதப்பட்ட நிலைமையினை மாற்றி. அதுவும் அஸ்தமன சூரியன் தான் என்று ஆக்கிக்காட்டிய பெருமைக்கும், இந்தியத் துணைக்கண்டத்திலிருக்கிற காங்கிரசுக்கட்சிக்காரர்கள் மட்டுமே முழு முதற்காரணமானவர்கள் என்று கண்மூடித்தனமான கருத்தில் திளைத்திருப்பதும், திளைத்துச் செயல்பட்டு வந்திருப்பதும், இப்போதும் செயல்பட்டு வருவதும் நாடு நன்கறிந்த ஒன்றாகும்.

சுதந்திரப்போர் என்பதிலே, நாட்டு மக்கள் அத்தனைப்பேரும் முழுவலிமையுடன் பங்கு பெற்றார்கள் என்பதனை காங்கிரசுக் கட்சி ஒப்புக்கொள்ளுமானால், பங்குபற்றிய அத்தனைப்பேரும் காங்கிரசுக் கட்சிக்காரர்கள் மட்டுமே அல்ல என்ற உண்மையினையும் ஒப்புக்கொள்ள முன்வரமுடியும். இந்த இரண்டினையும் ஒப்புக்கொண்டுவிட்டால், சுதந்திர நாள் விழா என்பது காங்கிரசுக் கட்சிக்கு மட்டுமே சொந்தமானது அல்ல என்பதும், பல்வேறு அரசியல் கட்சிகளிலுமிருக்கின்றவர்களுக்கும் அரசியல் ஆசாபாசங்களில் தம்மைப் பிணைத்துக்கொள்ளவிரும்பாமல் சுதந்திரமாகச் செயல்பட்டுக் கொண்டு இருக்கும் பொதுமக்களுக்கும் அதிலே சொந்தமிருக்கிறது என்பதனையும் ஏற்றுக்கொள்ள முடிந்தவர்களாகத் தம்மை மாற்றிக்கொள்ள முடியும். சுதந்திர நாள் விழா வென்பது மக்கள் விழா வென்பதனைக் காங்கிரசுக்காரர்கள் உணர்ந்து செயல்படத் தொடங்கினால். சுதந்திரம் என்பது காங்கிரசுக்கு மட்டுமே சொந்தமென்ற மாயையிலிருந்தும் விலகி விடமுடியும்.

இந்த உண்மையினைத்தான் இரண்டாண்டுகளுக்கு முன்பு நடைபெற்ற சுதந்திர நாள் விழாவில், மறைந்த மாமேதை பேரறிஞர் அண்ணா அவர்கள் தெள்ளத் தெளிவாக விளக்கிக் காட்டியதுடன், இது போன்ற பொதுவிழாக்கள் அனைத்துக் கட்சிகளும் பங்கு பற்றும் விதமாக ஏற்பாடு செய்து அனைவரும் மகிழ்வோடு கலந்து விழாவெடுக்கத் தக்கவிதமாக அமையவேண்டும் என்றும் தம் வேட்கையினை வெளியிட்டார்கள். நாட்டைப் பிடித்த பீடையாக காங்கிரசுக் கட்சியும், அதன் நடைமுறைகளும் இருந்து கொண்டிருப்பதன் காரணமாக, பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்தக் கருத்தை எந்த நாளில், எந்த மேடையிலிருந்து எடுத்துக் காட்டினார்களோ, அதே நாளில் இன்னொரு இடத்திலிருந்து ‘சுதந்திரம்’ என்பது தங்களுக்கேச் சொந்தம் என்ற வகையிலே முழங்கிக் கொண்டிருந்தார்கள். தமிழகத்தில் மட்டுமல்லாமல் துணைக்கண்டத்தின் மொத்த மாநிலங்களிலுமே இந்த நிலை நீடித்துக்கொண்டே வந்திருப்பதானது, காங்கிரஸ் இன்னமும் குறுகிய வளைவுக்குள்ளேயே சுற்றிச் சுற்றி வருகிறது என்பதனைத்தான் தெளிவுபடுத்தி இருக்கிறது.

எந்த மாநிலத்தில், எப்படி எப்படி இவ்விழா கொண்டாடப் பெற்றிருந்தாலும், இந்த ஆண்டு தமிழகத்தில் இந்த 22-வது சுதந்திர விழா அனைத்துக் கட்சிகளையும் ஒன்றாகக் கூட்டிவைத்து, காங்கிரஸ் கட்சியையும் சேர்த்துக்கொண்டு, ஆளுங் கட்சியாக இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் சீரோடும் சிறப்போடும் கொண்டாடி இருக்கிறது சென்னையில். எனவே, இந்த 22-வது விழா, ஒருவகையில் முக்கியத்துவம் வாய்ந்தது என்று கருதத்தக்கதாகும்.

அடுத்து, இந்த ஆண்டு காந்தியடிகளது நூற்றாண்டு விழாக்கொண்டாடும் ஆண்டாகும். இந்த ஆண்டில் கொண்டாடப்பெறும் சுதந்திர நாளானது, காந்தியடிகளது கருத்துக்களை ஏந்திச் செயல்படும் விழாவாக அமைந்திருக்கவேண்டிய கட்டாயத்தைக் கொண்டிருப்பதாகும். இது இரண்டாவது முக்கியத்துவமாகும்.

இந்த இரண்டாவது முக்கியத்துவத்தை நாட்டின் எந்தவொரு மாநிலமும் எண்ணிச் செயல்படுவதாகத் தெரியவில்லை. தென்னாட்டுக் காந்தியின் அடிச்சுவட்டில், தன்னைப் பதித்துச் செயல்பட்டு வரும் தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி அவர்களால் எண்ணிச் செயல் படுத்தப்பட்ட சுதந்திர நாள் விழா நிகழ்ச்சியானது ஓரளவு காந்தியடிகளது ஆன்மா, சாந்தியடைய வழியுண்டாக்கி விட்டிருக்கிறது.

ஓரளவு வழிகாட்டிவிட்டிருக்கும் தமிழகத்தின் இந்த நடைமுறையினைப் பாடமாகப்பெற்று அடுத்த ஆண்டு சுதந்திரநாள் விழாவானது நாடெங்கும் அனைத்துக்கட்சிகளையும் அணைத்துக்கொண்டு கொண்டாட அறிவுபெற்றால்தான் சுதந்திரத்தினையும் அதனைக் காத்துத்தீரவேண்டிய அவசியத்தினையும் மேலிடத்தார் உணர்ந்திருக்கிறார்கள் என்பதை நம்பமுடியும்.

★

# கிரி - ஒரு கம்யூனிஸ்டு?

—திருவாரூர் முத்துராமன்—

குடியரசுத் தலைவர் தேர்தலில் ஒரு வேட்பாளராக திரு. வி. வி. கிரி அவர்கள் நிற்பதும், அவருக்கு வலது, இடதுசாரி கம்யூனிஸ்டுகளும் சுதந்திரா, ஜனசங்கம் தவிர்ந்த பிற எல்லா எதிர்க்கட்சிகளும் ஆதரவு காட்டியதும் தெரிந்ததுதான். திரு. கிரியை ஒரு கம்யூனிஸ்டு என்றே சுதந்தரா கூறவும், ஜனசங்கமும் வருணிக்க வருவது எப்படி என்பது புரியவில்லை. கம்யூனிஸ்டுகளின் ஆதரவு வாக்குகளைப் பெறுவதனாலேயே, அவர் கம்யூனிஸ்டு என்று கூறப்படுமானால், தி. மு. க. வின் ஆதரவு வாக்குகளைப் பெற்றால் அவர் தி. மு. க. என்றல்லவா வருணிக்கப்பட வேண்டும் ச. சோ., பி. சோ. போன்றவர்களின் ஆதரவு வாக்குகளைப் பெறும்போது அவரை அந்தந்த கட்சியினைச் சேர்ந்தவர் என்றல்லவா கூறவேண்டும். பெரும்பான்மையான எதிர்க்கட்சிகளின் வாக்குகளைப் பெரும்வாய்ப்புப் படைத்த காரணத்தாலேயே அவர் அந்தந்த கட்சிக்குச் சொந்தக்காரர் என்று கூறிவிட முடியாது. இந்திரா அம்மையார் விரும்பியது போல், கிரியே காங். வேட்பாளராக இருந்திருந்தால், அப்போதும் இப்போதுள்ள அனைத்து எதிர்க்கட்சிகளும் அவரை ஆதரித்திருக்கக்கூடும். அதனால் அவரை யாரும் வருணிக்க முன் வருவார்களா? அப்படியானால் இந்திரா கம்யூனிஸ்டுதான் என்று திட்டவட்டமாகக் கூறுவார்களா? நேரு பெருமகனார் கூட தன்னை ஒரு கம்யூனிஸ்டுதான் என்று வெளிப்படையாகவே கூறியிருக்கிறார். அதனால் அவர் கம்யூனிஸ்டுதான் என்று வருணிக்கப்பட்டாரா? பேரறிஞர் அண்ணா அவர்கள் கூட, தி. மு. க. தான் உண்மையான கம்யூனிஸ்டு கட்சி. என்று ஒரு கட்டத்தில் வெளிப்படையாகவே கூறியிருக்கிறார். அதனால் தி. மு. க. கம்யூனிஸ்டு என்றாகிவிடுமா? காங்கிரஸ்கூட, சில இடங்களில் கம்யூனிஸ்டுகளின் ஆதரவினைப் பெற்றிருக்கிறது. அதனால் அதுவும் கம்யூனிஸ்டுதான் என்றாகிப் போகுமா? சில முற்போக்குக் கருத்துக்களைத் தீவிரமாக ஆதரிப்பதுதான் கம்யூனிசச் சித்தாந்தம் என்றால், உலகத்தில் கம்யூனிஸ்டு கட்சி எதிர்க்கப்படுகிற இடங்களிலெல்லாம் முற்போக்குக் கருத்துக்கள் எதிர்க்கப்படுகின்ற என்றல்லவா பொருளாகிப்போய் விடும்? இந்தியாவில் பரவலாக கம்யூனிஸ்டு கட்சி எதிர்க்கப்படுகிறது என்றால், நாடெங்கும் முற்போக்குக் கருத்துக்கள் கூடாது என்று எதிர்க்கப்படுகிறது என்றல்லவா பொருள்? இந்திரா அம்மையார் முற்போக்கு எண்ணம் படைத்தவராகிவிட்டிருக்கிறார் என்பதனால் அவர் கம்யூனிஸ்டுதான் என்று காங்கிரசுக்கட்சி முடிவெடுக்கிறதா?

கம்யூனிஸ்டுகள்மீது இருக்கிற ஒருவிதமான 'அருசை' காரணமாக, அந்த அருசையினைக் காட்டியும், அதன்மீது நிலவிக்கொண்டிருக்கிற அதிருப்தியின் அடிப்படையில், நாடெங்கும் ஒருவிதமான அதிருப்தியினை நிலவச் செய்யவும்தான் ஒருவரை, சட்டென்று 'கம்யூனிஸ்டு' என்று கூறுகிறார்களோ என்னவோ தெரியவில்லை.

'கம்யூனிஸ்டு' என்று வருணித்து விடுவதாலேயே ஒருவரை பயங்கரவாதி என்று நிரூபித்துவிட முடியுமானால், அப்புறம் ஒரு நாட்டில் வாழ்வும் வளர்ச்சியும் தேவைப்படுமா என்ன? வாழ்வும் வளர்ச்சியும் தேவையற்றதாகி விடுமே!

திரு. வி. வி. கிரி அவர்கள் முற்போக்கு எண்ணங் கொண்டவர். இந்திரா அம்மையாரின் முற்போக்கு நடவடிக்கை என்று கருதப்படும் பாங்குகள் நாட்டுடைமைச் சட்டத்திற்கு கிரி அவர்கள் ஒப்பி, அவசரச் சட்டம் பிறப்பித்து கையெழுத்திட்டது 'கம்யூனிசம்' என்றால், முன்னாளில் ஸ்டேட் பாங்கையும், அதற்கும் முன்பாக ஆயுள் காப்பிட்டுக் கழகத்தையும், அதற்கும் முன்பாக இரயில் போக்குவரத்தையும் நாட்டுடைமை ஆக்கியது என்ன 'லிசம்' என்று இவர்கள் கூறுகிறார்கள்?

வளர்ச்சியடைந்து கொண்டிருக்கும் ஒரு நாடு, தன் வளர்ச்சித் திட்ட அடிப்படையில் ஒரு கொள்கையினைச் செயல்படுத்த முனைவதனைக் கண்டிக்க ஒரு வாய்ப்பாக, "கம்யூனிஸ்டு" அல்லது "கம்யூனிசம்" என்று கூறத் துணிய முடியுமென்றால், கம்யூனிசம் என்பது பற்றிய அவர்களது கண்ணோட்டமே பிழையானது என்றல்லவா தெரிகிறது!

கிரி அவர்களைக் கம்யூனிஸ்டுகளோடு ஒப்பிடுவது எந்த அடிப்படையில்? என்பதனை நாட்டுக்கறிவித்தால் நல்லது! சுதந்திராவும் ஜனசங்கமும், ராஜாஜியும், மசானியும், பால்ராஜ்மதோக்கும் அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அறிவிப்பார்களா?

முற்போக்கு எண்ணங்களைக் கொண்டிருப்பதனாலேயே அவர் கம்யூனிஸ்டு என்றால், சுதந்திரா—ஜனசங்கம் பிற்போக்குக் கருத்துடையவை என்பது பொருளா? அப்படிப் பொருள் தருமென்றால், பிற்போக்குக் கருத்துக்கள் இந்தியத் துணைக்கண்டத்துக்கு தேவையா? அந்த அரசியல் கட்சிகளுக்கு இந்த நாட்டில் 'கடை' அவசியமா? என்பதுபற்றியெல்லாம் பொதுமக்கள் சிந்திக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இதுபோன்ற ஒரு சிந்தனையை நாடெங்கும் கிளப்பிவிடவேண்டியது அவசரமான அவசியமான நடவடிக்கையாகிவிடக்கூடும்.

★

## நம்பிக்கை!

நான் நம்பிக்கையில் வாழ்கிறேன் இந்த உலகத்திற்கு வரும் எல்லோரும் அப்படித்தான் என்று நான் எண்ணுகிறேன்.

—ராபர்ட் பிப்ட்ஜஸ்.

நமக்குப் பிரியமானவைகளில் நம்பிக்கையே மிகவும் நன்மை தருவது. அடிக்கடி அது ஏமாற்றத்தில் முடியாமலிருந்தால் அது வாழ்வை நீடிக்கச் செய்வது; நன்மை வருமென்று அது ஆசை அளித்துக் கொண்டேயிருக்கும்.

—பேக்கன்.

எல்லா விஷயங்களிலும், ஏக்கமுறுவதைவிட நம்பிக்கை கொள்வதே நலம்.

—கதே.

# தம்பி

நேரு பண்டிதர் வருகிறாராம்! தமிழ்நாட்டில் தேர்தல் பிரசாரத்தைத் துவக்கி வைக்கப்போகிறாராம்!! வேறு சில ஊர்களுக்கும் சென்று பிரசாரம் செய்வாராம்! பெருமையுடனும் பூரிப்புடனும் காமராஜர் இதனை அறிவித்திருக்கிறார்.

கமிட்டிகளிலே கவலையுடன் பேசினீர்களே! எவ்வளவு பணம் கரைந்து போகுமோ, எவனெவனுடைய கையைக் காலைப் பிடித்துக்கொண்டு கெஞ்சவேண்டி வருமோ, எப்படி எப்படி எல்லாம் நாட்டிலே பிரசாரம் செய்வார்களோ மாற்றுக் கட்சிக்காரர்கள் என்றெல்லாம் ஏங்கித் தவித்துக் கிடந்தீர்களே! இதோ கேளுங்கள் பெருமைக்குரிய செய்தியை; நம்பிக்கை தரும் செய்தியை; நான் நிலைமையை எடுத்துக்கூறி, நமது நேரு பண்டிதரை இங்கு வந்திருந்து தேர்தல் பிரசாரத்தைத் துவக்கித் தரச்சொல்லிக் கேட்டுக்கொண்டேன் அவரும் அன்புடன் இசைந்துவிட்டார், இனி என்ன பயம் உங்களுக்கு? துவக்குங்கள் வேலையை, துரிதமாகக் கிளம்புங்கள்!'' என்று, காங்கிரஸ் சார்பில் தேர்தலில் ஈடுபடும் கனதனவான்களுக்குக் காமராஜர் கூறிவிட்டார்!!

எனக்கு, தம்பி! இதிலே வருத்தந்தான்—அதற்குக் காரணம் இரண்டு.

சென்ற திங்களில்தான், இந்தப் பரந்த உபகண்டத்திலேயே, மிகப்பயங்கரமானதும் மிகமிகக் கோரமானதுமானதோர் இரயில் விபத்து நேரிட்டது — சர்க்கார் கணக்களித்துள்ளனர் 152 பிணங்களைக் கண்டெடுத்தோம் என்று—மற்றப்படி, கூழாகிப்போன உடலங்கள் ஏராளம்! குவியலாகக் கொட்டிக் கொளுத்திவிட்டார்களாமே! தொலைவிலே நின்றுகொண்டு, தீ மூண்டு எழுந்தது கண்டு ஐயோ! என் மகன்! அப்பா! என் தாய்! ஐயையோ! என் கணவன்! ஐயகோ! என் அருமை மனைவி! என் அண்ணன்! என் தம்பி! என்றெல்லாம் கதறினராம், சென்றவர்கள் பிணமாகக்கூடத் தம்மிடம் ஒப்படைக்கப்படாத நிலைபெற்ற துர்ப்பாக்கியவான்கள்! ஆற்றிலே மூழ்கி, இறந்து, உடலை, மீன்இனங்கள் கொத்திக் கொத்திக் கெடுத்துவிட்ட நிலையிலும், அழுகிப்போன நிலையிலும், பல சடலங்களை ஆங்காங்கே கண்டெடுத்தனர்! இது போன்றதோர் கோரமான விபத்து நேரிட்டதில்லை என்று உயர் நிலையில் உள்ளவர்களே [illegible]கொள்கின்றனர். விபத்து நடந்த இடத்தருகே செல்லவே முடியவில்லை. அவ்வளவு [illegible] நிலைமை என்கின்றனர் 'கனம்'கள்.

அப்போது, அரியலூர் வருவார்! ஆறுதல் அளிப்பார்! விபத்துக்குக் காரணமானவர்களைக் கண்டிப்பார்! விழியைத் துடைத்துக்கொள்ளுங்கள், மனமுடையும் துக்கம் நேரிடும்போதுதான், மகத்தான மனதிடம் காட்டவேண்டும்! என் அனுதாபம் உங்கட்குத் துணை நிற்கும்!—என்றெல்லாம் நேரு பண்டிதர் பேசுவார்; கேட்டு மக்கள் தமக்கு வந்துற்ற அவதியையும் ஓரளவுக்கு மறந்து, நமது முடிசூடா மன்னர், நமது குடும்பப் பெரியவர் போன்றவர், எத்துணை மனம் உருகிப் போயிருக்கிறார், நாம் அடைந்துள்ள அவதி கண்டு அவர் ஆழ்ந்த துயரம் அடைந்துள்ளார், அவர் கூறுவதுபோல, நமக்கு இப்படிப்பட்ட சமயத்திலேதான் மன திடம் வேண்டும், ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும் மாண்டார் வருவரோ! என்று ஆன்றோர் கூறினரன்றோ!! என்ன செய்வது, தாங்கிக் கொள்ளத்தான் வேண்டும் என்று கூறியும் எண்ணியும

## எரிகிற தழலில்...!



# கொள்ளுக்கு மட்டும் வாய் திறக்குமோ?

மனதுக்கு ஓர் சாந்தி தேடிக்கொண்டிருந்திருக்கக் கூடும்—இப்படியெல்லாம் நடக்கும் என்று எதிர்பார்த்தனர்.

நேரு பண்டிதரே நேரடியாக விபத்து நடைபெற்ற இடத்துக்கு வருகிறார் என்றவுடன், அந்த வட்டாரத்து அதிகாரிகள் குழாமே அலறிப்புடைத்துக்கொண்டு நிவாரண வேலையை மும்முரமாக்கி இருக்கும். நீயும் நானும் சென்றிருந்தால், என்ன நடைபெறும்! கதறுவோருடன் கூடி நாமும் அழுதிருப்போம்! ஐயயோ எனும் ஓலம் கேட்டு நாமும் துடித்திருப்போம். நேரு பண்டிதர் வந்திருந்தால் நிலைமையில் நிச்சயமாக ஓர் மாற்றம் தெரியும், ஆட்சித் தலைவருக்கு நம் மக்களிடம் எத்துணை அன்பு இருக்கிறது என்று தெரிந்திருக்கும், ஆனால், நேரு பண்டிதர் அரியலூர் வரவில்லை! பிணமலையும் இரத்த வெள்ளமும் கண்டு தமிழகம் துடிதுடித்து அழுதபோது ஆறுதல் அளித்திட நேரு பணடிதர் இங்கு வரவில்லை. தாலி இழந்த தாய்மார்கள், மகனை இழந்த மாதாக்கள், கதறினர், அம்மையே! அழாதே! வந்துற்ற விபத்து வேதனை தருவதுதான், எனினும், என்செய்வது தாங்கிக்கொள்ளத்தானே வேண்டும்! என்று தைரியம் பேசிட, ஆறுதல் அளித்திட நேரு பண்டிதர் வரவில்லை.

அரியலூர் விபத்தின்போது வராத நேரு பண்டிதர், ஓட்டு கேட்க மட்டும் ஓடோடி வருகிறாராம்!

வெட்கப்படுகிறோம், வேதனைப்படுகிறோம்!—என்று பொறுப்பை மறவாத, மனிதாபிமானத்தை இழந்திடாத காங்கிரஸ் நண்பர்கள் கூறிக் குமுறுவது தெரிகிறது, தம்பி, ஆனால் நேரு பண்டிதருடைய உள்ளப் பாங்கு எப்படி இருக்கிறது என்று எண்ணிப் பார்த்தாயா? எத்துணை அலட்சியம் இருந்தால், எந்த அளவுக்கு பந்தபாசம் இல்லாதிருந்தால், இங்கு 152 பிணம் கண்டெடுத்தோம் என்று சர்க்காரே கணக்குக் கொடுத்தனர், மற்ற உருவங்கள் உடலங்களாகக்கூட இல்லை, தலைவேறு உடல்வேறு, கால்வேறு கரம்வேறு என்று ஆகிவிட்டன, ஆகவே அடையாளம் கண்டறியவும் முடியவில்லை, இத்தனை பேர் என்று கணக்கு எடுக்கவும் இயலவில்லை என்றுகூறி, குழி வெட்டி அதிலேபோட்டு மொத்தமாகக் கொளுத்திவிட்டோம் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்; காணச் சகிக்காத காட்சியாக இருக்கிறதே, கண்றாவிக் கோலமாக இருக்கிறது என்று பத்திரிகைகள் எடுத்துக்காட்டின; இவ்வளவுக்குப் பிறகும், நேரு பண்டிதருடைய உடல் ஆடவில்லை, அசையவில்லை, ஓடோடிச் சென்று, அந்த மக்கள் மத்தியில் நின்று, மாரடித்து அழும் அந்த மக்களுக்கு ஆறுதல் அளிப்போம் என்று இரக்கம் எழவில்லை! இப்போது வருகிறாராம், எல்லோரும் காங்கிரசுக்கே ஓட்டு அளியுங்கள்! என்று உத்தரவு பிறப்பிக்க! ஒரு வேளை, மக்களைப் பார்த்து அந்த மகானுபாவர் கோபித்துக் கொண்டால்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை; "மக்களே என்ன உங்கள் புத்தி வர வர இப்படிக்கெட்டுப் போகிறது! எதற்காக இரயிலைக் கவிழவிட்டீர்கள்! அதனாலே இரயில்வே இலாகாவுக்கு எவ்வளவு பெரிய நஷ்டம். அதுதான் போகட்டும் என்றால், எவ்வளவு பேர் செத்துவிட்டார்கள்—அதனால் எங்கள் கட்சிக்கு எத்தனை 'ஓட்டு' நஷ்டம் தெரியுமா? இனி இப்படி எல்லாம், சாகாதீர்கள்—எப்படியும் ஐந்தாண்டுக்கு ஒரு தடவை எங்கள் கட்சிக்கு ஓட்டு தரவேண்டுமே அதை மறந்துவிட்டு, மடிந்து போகிறீர்கள்—இது மன்னிக்க முடியாத குற்றம்! எனினும் பொறுத்தேன்—இனி இந்தத் தேர்தலில் அனைவரும் கூடி, ஐந்தாண்டுத் திட்ட பஜனைபாடி, ஓட்டுச் சாவடிக்கு ஓடி, மாட்டுப் பெட்டியை நிரப்புங்கள்—என்று கூடப் பேசுவார்.

தமிழ் நாட்டிலே, இந்த அரியலூர் விபத்தின் போது மட்டுமல்ல தம்பி, முன்பு இருமுறை புயலால் பேரிழப்பு நேரிட்டபோதும், நேரு பண்டிதர் வரவில்லை. உனக்கு நினைவிலிருக்கும், புயல் நிவாரண நிதிக்காகப் பணியாற்றியிருக்கிறாயே! காங்கிரஸ் நண்பர்களுக்கு நினைவில் இருக்காது; நினைவிற்குக்கொண்டுவருவது என்றாலும் அவர்களுக்குச் சங்கடமாக இருக்கும்.

ஆனால் நாடு எப்படி மறக்க முடியும்; தமிழகத்தில் புயலாலும் வெள்ளத்தாலும் இரயில் விபத்தாலும் பயங்கரமான அழிவு நேரிட்டு, அழுகுரல் பீறிட்டுக் கிளம்பிய நேரத்திலெல்லாம், நேரு பண்டிதர் வரவில்லை.

தமிழகத்திலே தேர்தல் பிரசாரத்துக்கு இப்போது வருகிறார்; முன்பும் வந்திருந்தார்!

தேர் திருவிழாப்போல நடத்தப்படும் கோலாகலங்களிலே கலந்துகொள்ள, அடிக்கடி வருகிறார்—ஆனந்தத்தோடு வருகிறார்!

சங்கீதவித்வத் சபையின் துவக்க விழாவா? வருகிறார்!

கண்காட்சி துவக்க வேண்டுமா? வருகிறார்!

திருவிதாங்கூர் சமஸ்தானத்துக் காட்டிலே, கண்ணாடி மாளிகையிலே தங்கி இருந்து, கரிகளின் காதல் விளையாட்டினையும், புலியாரின களியாட்டத்தையும் கண்டு களிக்கலாம் என்று அழைப்பு விடுத்தனர்; சென்றார், கண்டார்!

தமிழ் இசையை நான் அறியேன்! இசையேகூடப் பொதுவாக எனக்குப் புரியாது! எனினும் சுப்பு லட்சுமியின் கானம் கேட்கும்போது, விவரிக்க முடியாததோர் ஆனந்தம் எழத்தான் செய்கிறது. சுப்புலட்சுமியார் சங்கீத ராணி!—என்று நெஞ்சு நெக்குருகப் பேசினார்!

எல்லா விழாக்களுக்கும் அழைப்பு அனுப்பினால், தமிழகம் வருகிறார்-விபத்து, அழிவு, நேரிடுகிறது என்றால், வருவது இல்லை, வரவேண்டும் — ஆறுதல் அளிக்க வேண்டும என்ற பாசம் எழுவதில்லை; டில்லியிலேயே நமது வல்லத்தரசுதான் குழந்தைபோலத் தேம்பித் தேம்பி அழுதார் என்று பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன; நேருபண்டிதருக்கு ஏற்பட்ட வருத்தமெல்லாம் தமது ஆருயிர்த்தோழர் லால்பகதூர் சாஸ்திரி, இந்தக் காரணததுக்காக மந்திரிப் பதவியை ராஜிநாமாச் செய்துவிட்டாரே என்பதுதான்.

நேரு பண்டிதரின் இதயம் ரொம்ப மென்மையானது—அவரால் அவதியை, அழுகுரலைச் சந்திக்க முடியாது—விபத்து, வேதனை என்றால அவரால் காணச் சகிக்காது—அதனாலேதான் அவர், தமிழகத்தில் புயலும் வெள்ளமும் புகுந்து அழிவு ஏற்படுத்திய நேரத்தி

# நேருதான் வந்தார்; நிமிர்த்த முடிந்ததோ?

லும், இப்போது அரியலூர் இரயில் விபத்தால் பயங்கர நாசம் ஏற்பட்டநேரத்திலும், நேரடியாக வந்து ஆறுதல் கூறவில்லை அறிமின்! அறிவிலிகாள்! இதைக் காட்டிக் கரிபூசாதீர்! துரும்பைத் தூணாக்காதீர்! என்று வாதாடும் வழக்கறிஞர்கள் இருக்கிறார்கள். உண்மையா அது என்று பார்த்தால், அல்ல, அல்ல, என்று விளக்கமாகத் தெரிகிறது.

வடக்கே எங்கு எவ்விதமான விபத்து நேரிட்டுவிட்டாலும், நேரு பண்டிதர், உடனே பறந்து சென்று, பாசமும் நேசமும் காட்டுகிறார், அன்பும் ஆறுதலும் பொழிகிறார்; இதனை இல்லை என்று எவ்வளவு துணிவுபெற்ற காங்கிரஸ்காரரும் சொல்லிவிடமுடியாது.

கோசி நதியால் வெள்ள விபத்து
கட்சு பூகம்ப விபத்து
அசாமில் வெள்ள விபத்து
உத்தரப்பிரதேசத்தில் வெள்ள விபத்து

இந்தச் சந்தர்ப்பங்களிலெல்லாம் நேரு பண்டிதர் சென்றதும், ஜீப்பிலும் விமானத்திலும் பயணம் செய்து, மக்கள் மத்தியில் நடமாடி ஆறுதல் அளித்ததும், காங்கிரஸ் நண்பர்களுக்கும் தெரியும்.

அங்கெல்லாம் அவதி நேரிட்டபோது, ஓடோடிச் சென்று, உருக்கம் காட்டிய நேரு பண்டிதர், தமிழகத்திலே அழிவு நேரிட்டு, மக்கள் கதறும்போது மட்டும், நேரில் சென்று துக்கத்தைப்பகிர்ந்து கொள்ளவேண்டும் ஆறுதல் கூறி சோகத்தைக் துடைக்கவேண்டும் என்று எண்ணவில்லை. அந்த எண்ணம் இயல்பாக எழாத காரணம் என்ன? ஏன் அந்த மனம் வடக்கே காணப்படும் விபத்துகளின்போது அனலிடு மெழுகாகிறது. தமிழகம் தலைவிரிகோல மாகும்போது மட்டும், பாறையாகி விடுகிறது? இந்த விசித்திரமான போக்குக்குக் காரணம் என்ன? நாம் கூறும்போது பலருக்குக் கோபம் கூட இருக்கிறது. சுவைக்கு உதவாத காட்டுமிராண்டிக் கருத்தென்று ஏசக் கூடச் செய்கிறார்கள். எனினும், இத்தகைய சம்பவங்களின் போதாவது, சிறிதேனும் ஆழச் சிந்திப்பார்களானால், சீற்றமடையும் நண்பர்கள் நாம் வலியுறுத்தி வரும் உண்மையை உணருவார்கள்— வடக்கு வேறுதான்—தெற்கு வேறுதான்!!

தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும் என்பார்களே—அது தமிழகத்தில் விபத்து நேரிடும்போது நேரு பண்டிதருக்கு ஏற்படுவது இல்லை.

ஆனந்த விகடனுக்கே இது ஆச்சரியத்தை மூட்டிவிட்டிருக்கிறது; சிறிது ஆயாசமும் எழுத்திலே தொனிக்கிறது; எண்ணத்தில் மட்டும் நாம் கூறிவரும் உண்மை இடம்பெற மறுக்கிறது! எனினும் ஆச்சரியத்தையேனும் தந்திருக்கிறதே என்று எனக்கு ஓரளவு திருப்திதான். தம்பி! நேரு பண்டிதருடைய இந்தப் போக்கு விகடனுக்கு விசாரம் தருகிறது.

> "நமது பிரதம மந்திரி நேருஜீ, அரியலூர் விபத்து நடந்தவுடனேயே ஒரு நிபுணர் கோஷ்டியுடன்கூட, விபத்து நடத்த இடத்துக்கு நேரில் வந்து பார்த்திருக்கவேண்டும் என நாம் கருதுகிறோம். அவர் ஏன் அப்படிச் செய்யவில்லை என்பது ஆச்சரியமாக இருக்கிறது. கோசி நதியில் வெள்ளம் வந்து சேதம் விளைவித்தபோது, அவர் அந்தப் பிரதேசங்கள் மீது பறந்து பார்வையிட்டார். கட்சில் பூகம்பம் நாசம் விளைவித்தபோதும், அசாமிலும் உத்திரப்பிரதேசத்திலும் ஏற்பட்டபோதும், அவர் அங்கெல்லாம் நேரில் விஜயம் செய்து பார்வையிட்டார். இதனால் கஷ்டப்படும் மக்களுக்கு ஆறுதல் பெற முடிந்ததோடு நிவாரணவேலைகளும், பாதுகாப்பு ஏற்பாடுகளும், உடனடியாக நடப்பது சாத்தியமாயிற்று"

இவ்விதம் ஆனந்த விகடனே எழுத நேரிடுகிறது.

அரியலூர் விபத்து, நேரு பண்டிதரை இங்கு வரவழைக்கவில்லை; ஆனால் தேர்தல் ஆபத்து அவரை இங்கு ஓடோடி வரச்செய்கிறது,

அரியலூர் விபத்தின்போது நேரு பண்டிதரை, இங்கு வரச்சொல்லி அழைத்து, தமிழ் மக்களின் துயரத்தைக் கண்ணாலே பாருங்கள், என்று காட்டிட, காமராஜருக்கு எண்ணம் எழவில்லை, தேர்தல் ஆபத்து என்றஉடன், வாருங்கள்! மக்களிடை பிரசாரம் செய்யுங்கள்! ஓட்டு வரம் தாருங்கள்!—என்று ஏத்தி ஏத்தித் தொழுது, நேரு பண்டிதரை இங்கு அழைத்து வரவேண்டும் என்ற அவசியம் காமராஜருக்குச் சுரக்கிறது.

தம்பி! என் துக்கத்துக்கு மற்றோர் காரணம் என்ன தெரியுமா? இங்கு, காமராஜரையும் அவருடைய கூட்டாளிகளையும் இந்தத் தேர்தலிலே வெற்றிபெறச் செய்வதே இப்போதைக்கு அவசரமான அவசியமான கடமை என்று கூறி, உள்ளன்புடன் பெரியார் பாடுபடுகிறார்—அவருடைய இன்றைய நண்பர்களோ, அந்த நோக்கத்துடன், தீனாமூனாகானாக்களுடைய பெட்டியிலே, ஒரு ஓட்டுகூடப் போடக்கூடாது, மண்ணை அள்ளிப் போடுங்கள் என்று கூறும் அளவுக்குப் பிரசார இயந்திரத்தை முடுக்கிவிடுகிறார்கள் — காமராஜரின் யோக்யதை என்ன, உன் யோக்யதை என்ன! அட பாவி! அவரைப்போய் எதிர்க்கக் கிளம்புகிறாயே!!— என்று மனம் நொந்து பேசுகிறார்கள், காமராஜர் பக்கம் அணிவகுத்து நிற்கிறார்கள்!

இருந்தும், பார் தம்பி! காமராஜர், நேரு பண்டிதரைத் தான் அழைத்து வருகிறார், தமிழகத் தேர்தல் பிரசாரத்துக்காக!!

சென்ற பொதுத்தேர்தலின்போது, பெரியார் காங்கிரஸ் கட்சியை ஒழித்துக்கட்டுவதற்காகப் பெரும்பணியாற்றினார். அப்போது அவருடைய பலமான எதிர்ப்பைச் சமாளிக்க, நேரு பண்டிதர் தேவைப்பட்டார்; வரவழைக்கப்பட்டார். இப்போதுதான், பெரியாரின் பேராதரவு காமராஜருக்குக் கிடைத்திருக்கிறதே; நேரு பண்டிதர் வந்திருந்து உதவி செய்யவேண்டிய அவசியம் என்ன?

முன்பு இருந்ததைவிடத் தமிழகத்தில் காங்கிரசுக்குச் செல்வாக்கு அமோகமாகிவிட்டது; காமராஜரின் வீரமும் தீரமும் வேலைப்பாடும் மிகுந்த நன்மை தரும் திட்டங்களின் காரணமாக, எதிர்ப்புகள் பட்டுப் போயின, புது உறவுகள் பூத்துக் காய்க்கின்றன என்

# ஐயனே, மெய்யனே, ஆடியபாதனே!

கிறார்கள்—எதிர்த்து நிற்கும் நாமோ, அற்பர்கள். அலட்சியப்படுத்தத்தக்கவர்கள் என்கிறார்கள்; இந்த நிலையில் காமராஜர் ஏன், நேரு பண்டிதரை வரவழைக்கிறார்!

பெரியார் எனக்காகப் பிரசாரம் செய்கிறார் — செய்யட்டும் — ஆனால் அது போதாது — காங்கிரசுக்கு வெற்றி கிடைக்கவேண்டுமானால், பாரெல்லாம் புகழ்பெற்ற பஞ்சசீலப் பண்டிதர், நேரு வரவேண்டும் —அப்போதுதான் இலட்சக் கணக்கிலே மக்கள் கூடுவர், கொண்டாடுவர், அப்போதுதான் ஓட்டுகள் குவியும் என்று அல்லவா, காமராஜர் எண்ணுவதாகத் தெரிகிறது!! இது எனக்கு ஏற்பட்டுள்ள துக்கத்துக்கு உள்ள இரண்டாவது காரணம்.

பெரியாரின் பேரன்பர்கள் இதற்கெல்லாமா மனம் உடைந்து போவார்கள்! என்ன ஆணவம் இந்தக் காமராஜருக்கு! நமது பெரியாரின் பேராதரவு இடைவிடாது கிடைத்திருக்கும்போது, இந்தக் கண்ணீர்த் துளிகளையும் கம்யூனிஸ்டுகளையும், பிரஜாக்களையும் சோஷியலிஸ்டுகளையும், உதிரிகளையும் பூண்டோடு ஒழித்துக்கட்டிவிட்டு, பிறகு திராவிட நாடு பெறுவது போன்ற வேலையில் ஈடுபடுவோம் என்று சூள் உரைத்துவிட்டு, பிறகு சுறு சுறுப்புடன், விறு விறுப்புடன் நாம் பணியாற்றி வருகிறதைக் கண்ணாலே கண்டான பிறகு இந்தக் காமராஜர் தேர்தல் பிரசாரத்துக்காக, நேரு பண்டிதரை வரவழைக்கிறேன் என்ற அறிவிக்கிறாரே! இது தகுமா? முறையா? தேவையா? நம்மைபபற்றி அவர் இவ்வளவு தாழ்வாக கருதுவது! என்றெல்லாம எண்ணவா போகிறார்கள்!! நான் அப்படி நினைக்கவில்லை. இந்த ராஜகோபாலாச்சாரியார் என்ன, இப்படிக் கெட்டுவிட்டாரே! ராமசாமி பெரியாரின் தாத்துக்கு வந்துவிட்டாரே! என்று காமராஜர் கேவலப்படுத்திப் பேசியதைக் கேட்டே, சகித்துக்கொண்டவர்கள், இப்போது ஏன் கோபம் கொள்ளப்போகிறார்கள்!

"நல்ல பிரபலமான சர்ஜனை வரவழைத்துக் காட்டப்போகிறேன்" என்று கூறுவது கேட்டால், அதுவரை வைத்தியம் பார்த்துவந்த டாக்டருக்குக் கோபம் வரும்—தன்னை மரியாதைக் குறைவாக நடத்துகிறார்கள் என்று மனவேதனை ஏற்படும. காமராஜரோ துணிந்து நானென்றும் பெரியாரை நம்பிக்கொண்டில்லை. பெரியாரின் பிரசாரம் போதும் என்று திருப்திப்பட்டுக் கொண்டில்லை, பெரியாரின் துணை தேர்தலில் வெற்றி தந்துவிடும் என்று சும்மா இருந்துவிடமாட்டேன். நான், என் நேருவை வரவழைக்கிறேன் என்று சொல்லுகிறார்.

இந்த அவருடைய மனப்பான்மை எனக்குத் துக்கத்தைத் தருகிறது.

எப்படியோ ஒன்று, நேரு பண்டிதர் வருகிறார், தேர்தல் பிரசாரம் செய்ய—அரியலூர் விபத்தின்போது தமிழகத்தை அலட்சியப்படுத்தியவர், புயல் வெள்ளக் கொடுமையின்போது தமிழகத்தை எட்டிப் பார்த்திட மனமற்று இருந்தவர், தேர்தலுக்காக தமிழ் நாடு வருகிறார்! வரட்டும் தமது செல்வாக்கை வழங்கட்டும்! ஈளைகட்டி இருமிக்கொண்டிருக்கும் நோயாளியைப் பிழைக்கவைக்கட்டும்—தம்பி—எனக்கு அது பற்றித் துளியும் கவலை இல்லை ஆனால் இதுபோன்ற சம்பவங்கள், தமிழ் நாட்டை எவ்வளவு உதாசீனப்படுத்துகிறார்கள், எத்துணை அலட்சியம் காட்டப்படுகிறது என்பதை எடுத்துக்காட்டுவதாக அமையும்போதுதான் வேதனை குடைகிறது.

ஒவ்வொரு முனையிலும் இந்த நிலை காண்கிறோம்—ஒவ்வொரு முனையிலும். இந்தப் போக்கினாலே கஷ்டநஷ்டம் அடைபவர்கள். மனம் குமுறுகிறார்கள். சில வேளைகளிலே கண்டனத்தைக்கூட வெளியிடுகிறார்கள்—ஆனால்: தொடர்ந்து நடைபெறும் இந்த ஓரவஞ்சனையை—மாற்றுந்தாய் மனப்பான்மையை—மாற்றிட பொதுவான, பலமான முயற்சி எடுத்திட முன்வருவதில்லை! ஆபத்தின்போது அவரவர்கள் தத்தமது உயிரையும் உடைமையையும் பாதுகாத்துக்கொண்டால்போதும் என்று இருந்துவிடுவதுபோல, நம் வரையில் சலுகை கிடைத்துவிட்டால்போதும், ஊர்த் தொல்லையைத் தூக்கி நாம் நம் தோளில்போட்டுக் கொள்வானேன் என்று இருந்துவிடுகிறார்கள். இந்தப் போக்கு தெரிகிறது பண்டிதருக்கு; எனவேதான் அவர் அரியலூர் விபத்தின்போது கண்ணீரைத் துடைக்க இங்கு வரவில்லை, ஓட்டுகளைத் தட்டிப் பறித்திடமட்டும் வர இருக்கிறார்.

இவருடைய இந்தப் போக்கு நியாயமா? இவர் ஈவு இரக்கம், மனிதாபிமானம், மக்களாட்சிக்குத் தேவையான கடமை உணர்ச்சி ஆகிய தூய்மை கொண்ட உள்ளத்தினர்தானா என்றெல்லாம் ஆராய்வதற்காக நான் இதனை விளக்கினேன் இல்லை! நமது நாட்டுக்குத் தரப்படும் நிலைமையைப்பற்றி, நாட்டுப் பற்றுக்கொண்டோரனைவரும் எண்ணிப் பார்த்திட வேண்டும் என்பதற்காகவே இதனை விரிவாகக் கூறினேன்.

தமிழ்நாடு, இந்தத் தாழ்நிலைக்குக் கொண்டுவந்து வைக்கப்பட்டிருப்பதைக் காட்டிடும் நிகழ்ச்சிகள் பலப்பல. அதில் இது ஒன்று.

தமிழகம் தவித்தபோது இங்கு வராத நேருபண்டிதர் ஓட்டு கேட்கமட்டும் வருகிறார். என்பது வேதனை தருகிறது அதுபோலவே காங்கிரசுக்கு ஓட்டு அளிக்கும்படி மக்களிடம் பேசிட, தமிழகத்துக்குத்தான் நேரு வருகிறாரே தவிர, வங்கத்துக்குக் காமராஜர் போகிறார் இல்லை, பாஞ்சாலத்துக்கு பக்தவத்சலம் பறக்கிறார் என்று இல்லை. இது வெட்கமும் வேதனையும் தருகிற நிலைமையாகும். ஆனால் இரண்டு என்ன—எத்தனையையும் ஏற்றுக்கொண்டு பதவியில் ஒட்டிக்கொண்டிருக்க இங்கு காங்கிரஸ் கனவான்கள், தயாராக இருக்கிறார்கள்

தேவிகுளம்
பீர்மேடு
நெய்யாற்றங்கரை
கொச்சின்—சித்தூர்
பாலக்காட்டுத் தமிழ்ப்பகுதி

தமிழருக்கு இல்லை! என்று டில்லி உத்தரவு பிறப்பித்தது—ஐயனே! மெய்யனே! இதோ பாரும் புள்ளி விவரம்! இந்தப் பகுதி எல்லாம் தமிழருக்கே உரியது என்பது விளங்கும் என்று இருந்து முகந்திருத்திக்' கூறினர்; "என்னிடம் புள்ளி விவரம் காட்டவா துணிகிறீர்கள்!"

# கேட்டது கிடைத்ததோ? கேளடி, கேள்!

என்று நேரு பண்டிதர் உருட்டு விழி காட்டினார். "எமை ஆளும் கோவே! பிழை பொறுத்திடுக! பெருங் கோபம் விடுத்திடுக! குளமாவது மேடாவது! குணாளா! உன் குளிர்மதிப் பார்வைபோதும் எமக்கு! தேவிகுளம் போனாலென்ன, தேவதேவா! உன் திருப்பார்வை பட்டால் போதாதா! அந்தப் பகுதி அனைத்தும் அளித்து விடுகிறோம். அதுமட்டுமல்ல, எமை ஆளாக்கிவிட்ட ஆற்றலரசே! செங்கோட்டையில் ஒரு பாதியையும் தருகிறோம், பெற்றுக்கொள்க!—என்று கூறிவிட்டு வந்தவர்களல்லவா கோலோச்சுகிறார்கள்.

இலங்கையில் தமிழர்களைப் படுகொலை செய்கிற பண்டார நாயகாவின் ஆட்சியின் போக்குப்பற்றி, ஒரு துளியும் டில்லி நடவடிக்கை எடுத்ததில்லை—சிறிதளவு அதட்டிக் கேட்கலாகாதா, அவனி புகழ ஒரு காலத்தில் வாழ்ந்த இனமாயிற்றே எமது தமிழர், சிங்களத்தை எமது மன்னன் வென்று, அந்தப் போரிலே பிடிபட்ட சிங்களவர்களைக் கொண்டு, காவிரிக்குக் கரை அமைத்தான் என்று கல்லில் பொறித்திருக்கிறார்களே! அத்தகைய வீரமரபினர், இன்று ஓட்டாண்டிகளாக ஆக்கப்படுகிறார்களே கள்ளத்தோணிகள் என்று கேவலப்படுத்தப் படுகிறார்களே—இதற்குப் பரிகாரம் காண ஒரு சிறு முயற்சி எடுத்திடவேண்டாமா—பாதகம் விளைவிக்கும் பண்டாரநாயகாவின் ஆட்சிக்கு நல்லறிவு கொளுத்தவேண்டாமா? என்று கேட்டனரோ நமது மந்திரிமார்! இல்லை! கேட்டால் மந்திரிப் பதவி நிலைக்காதே என்ற மருட்சியால், வாய் அடைத்துக்கிடந்தனர்!

ஒவ்வோர் சமயத்திலும் இதே போக்குத்தானே கண்டோம். மனம் குமுறிப் பேசினர் பலரும் எனினும் நிலைமையில் எந்த மாறுதலும் ஏற்படவில்லை; ஒவ்வோரு துறையிலும் டில்லி ஆதிக்க உணர்ச்சியையும் தமிழரின் நியாயமான கோரிக்கைகளைக்கூட அலட்சியப்படுத்தும் போக்கையும் காட்டிக்கொண்டேதான் வருகிறது.

சென்னை மந்திரிமார்களிலேயே மார்தட்டிப் பேசுவதில் முதல் தாம்பூலம் பெற்றவர், நிதி அமைச்சர்

நமது கழகப் பெயர் கேட்டாலே அவர் நெரித்த புருவத்தினராகிறார்.

நமது கழகத்தைத் தாக்கிப் பேசக் கிளம்பினாலோ, பற்களை நற நறவெனக் கடிக்கிறார்.

அப்படிப்பட்ட 'வீரதீரமிக்கவர்' இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தொழில் துறையிலே பின் தங்கி இருக்கும் சென்னைக்கு, முதல் ஐந்தாண்டுத் திட்டத்திலே புறக்கணிக்கப்பட்டுபோன சென்னைக்கு 400—கோடி ரூபாயாவது தரவேண்டும் என்று கேட்டார். கரம் கூப்பினார், கண்ணைப் பிசைந்து கொண்டார், 'கஷ்டத்தைப் பார்த்துக் கூலிகொடுங்கள் எஜமானே! உங்கள் வாய்க்கு வெற்றிலைபாக்கு நம வயிற்றுக்குச் சோறு!' என்று கெஞ்சுவார்களே—அதுபோலெல்லாம் கேட்டுப்பார்த்தார், என்ன நடந்தது என்பதைத் தம்பி, நாடறியுமே! கேட்டது 400—கிடைத்தது 170! இந்த இலட்சணத்தில் இருக்கிறது தொடர்பு காட்டும வீரம் அத்தனையும். இங்கே, நம்மிடந்தானே! டில்லி சென்றதும், எவ்வளவு அடக்க ஒடுக்கம். பயபக்தி ஏ! அப்பா! என்ன சொன்னால், நேரு பண்டிதருக்குக் கோபம் வந்துவிடுமோ—அதன் பயனாகப் பதவிக்கு ஆபத்து நேரிடுமோ என்ற திகில், இவர்களை தஞ்சாவூர் தலையாட்டிப் பொம்மைகளாக்கிவிடுகிறது! இங்கே பார் வீரத்தை! குட்டுபவனுடைய கரத்தில் மோதிரம் இருந்தால் வலியையும் தாங்கிக்கொண்டு "ஆஹா! அருமையான வைரம்! அற்புதமான பூரிப்பு"—என்று பாராட்டுகிறார்கள்.

கலைத் துறை கல்வித்துறை, வணிகத்துறை எனும் பல்வேறு துறைகளிலே நடைபெறும் அநீதிமிக்க போக்கை தம்பி! நான் அவ்வபோது விளக்கித் தருகிறேன், இதனைக் கண்ணுறும் காங்கிரஸ் நண்பர்கள் எண்ணுகிறார்களோ தெரியவில்லை. நாடு மட்டும் நிச்சயமாக, அறிந்து ஆறாத் துயரம் கொண்டிருக்கிறது. நேருபண்டிதரைக் கண்டால் அந்தத் துயரமும் கோபமும், பகலவன் முன்பனிபோலாகும் என்று காமராஜர் கருதுகிறார்—பலமுறை அது போலாகி இருக்கிறது—இம்முறை அது பலிக்கப்போவதில்லை, மக்கள் மனம் கொந்தளித்துக் கொண்டிருக்கிறது.

நாம் மட்டுமல்ல தம்பி, நாட்டிலே உள்ள பல்வேறு முற்போக்குக் கட்சிகளும், தமிழர் மிகப்பெருவாரியாகக் குடியேறி உள்ள வெளிநாடுகளுக்காகிலும், தமிழர்களையே தூதுவர்களாக அனுப்பிவைக்கவேண்டும்—இது உரிமைப் பிரச்சினை என்றுகூட அல்ல, வசதியைக் கவனித்தாலே இதுபோலச் செய்வதுதான் திறம் தரும் என்பதை வலியுறுத்திக் கூறியபடி உள்ளன.

பொதுக் கூட்டங்கள் பலவற்றிலே, மன்றங்களிலே மாநாடுகளிலே விளக்கப்பட்டு, வேண்டிக் கேட்டுக் கொள்ளப்பட்டது.

தமிழர்களைத் தூதுவர்களாக அனுப்புவதால், டில்லிக்கு நஷ்டம் ஏற்படப்போவதுமில்லை, அதனைச் செய்வதிலே கஷ்டமும் எழாது.

இங்குள்ள தமிழர்களும் இதை விரும்புகிறார்கள், குடி ஏறியுள்ள தமிழர்களும் ஆவலுடன் வரவேற்கிறார்கள்.

எனினும் இந்த ஒரு சிறிய காரியத்திலேகூட, டில்லி தன் போக்கை மாற்றிக்கொள்ளவில்லை! மேதைகள் கேட்கிறார்கள், காதிலே ஏறவில்லை! அரசியல் கட்சிகளுக்கு அப்பாற்பட்ட பிரமுகர்கள்கூடக் கேட்கிறார்கள், அதனையும் டில்லி பொருட்படுத்த மறுக்கிறது தொடர்ந்து, துணிந்து, எல்லா இடங்கட்கும், வடக்கிலிருந்தே தூதுவர்களை அனுப்புகிறது—அதிலும் குறிப்

**அடுத்த இதழில்**

அறிஞர் அண்ணா

அவர்களின்

காட்டாட்சி.....

என்ற தம்பிக்கு மடல் இடம்பெறும்.

# அவர் மட்டும் போதுமே, அதுபோல் ஏசிட!

பாக, தமிழர்கள் மிகப் பெருவாரியாகக் குடி ஏறியுள்ள நாடுகளில்! நியாயமா? கேட்டுப்பாரேன், காங்கிரஸ்காரர்களை. "என்ன தோழரே! செய்வது?" என்று பரிதாபத்தோடு சிலரும், "இதெல்லாம் ஒரு பெரிய, பிரமாதமான பிரச்சினை அல்ல' என்று அலட்சியத்தோடு சிலரும் பேசுவர்—ஆனால் அந்தக் காங்கிரஸ்காரர் மனதிலெல்லாம் நிச்சயமாக, கசப்பு முற்றிக் கொண்டுதான் வருகிறது. இதை, நேருவின் விஜயம் மாற்றிவிடாது.

நேரு பண்டிதர் தமிழகத்துக்கு வந்து பிரசாரம் செய்தால்தான், காங்கிரசை எதிர்த்துத் தேர்தலில் ஈடுபடும் நமது கழகத்தின் செல்வாக்கைச் சிதைத்திட முடியும் என்று காமராஜர் கணக்குப்போடுவது தவறு என்பது மட்டுமல்ல, அவர் அந்தக் கணக்குப் போடுவதன் மூலம், நமது கழகத்திடம் எவ்வளவு கடும் கோபம் கொண்டிருக்கிறார் என்பது தெரிகிறது மட்டுமல்ல. பெரியாரின் துணையை அவர் போதுமானது என்று எண்ணவில்லை என்பது தெளிவாகிறது.

காமராஜர் கருதுவதுபோல் நேரு பண்டிதர் இங்கு வந்து, பேசுவதன் மூலம், நமது கழகத்துக்குப் புதிதாக ஏதேனும் ஓர் எதிர்ப்பு கிளம்பும் என்று நான் நம்பவில்லை! நேரு பண்டிதருக்குப் பாவம், சர்வதேச நிலைமையை விளக்கிட, தனக்கும் பிறநாட்டுத் தலைவர்களுக்கும் உள்ள தொடர்புகளைச் சித்தரித்துக் காட்டவே நேரம் போதாது! மேலும் தம்பி! நமது கழகத்தைத் தாக்கிட, நமது கழகத்திலுள்ள பணியாளர்களை, குறிப்பாக உன் அண்ணனைப்பற்றி.

அடுத்துக் கெடுப்பவர்

உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்வோர்

ஊர் சுற்றிகள்

என்று கடுமையாகவும், காரசாரமாகவும் பேசிடவா தெரியும்! அதற்கெல்லாம் பெரியார் இருக்கிறார்! வேறு எதற்காக நேரு பண்டிதரைக் காமராஜர் வரவழைக்கிறாரோ தெரியவில்லை.

காரணம் எதுவாயினும், தம்பி, நேரு பண்டிதரின் 'விஜயம்', இங்குள்ள பொதுமக்கள் மனதிலே, பல்வேறு சம்பவங்களின் மூலமாக மூண்டு கிடக்கும் கசப்பினைப் போக்கிடப் போவதில்லை என்பது மட்டும் உறுதி.

நேரு பண்டிதரைப் பார்க்கும்போதே, புயலின் போது நாம் புலம்பிக் கிடந்தபோது வராத நேரு, வெள்ளக் கொடுமையிலே மூழ்கி வதைபட்டபோது வராத நேரு, அரியலூரில் விபத்தினால் கதறித் துடித்த காலை வராத நேரு, இப்போது ஓட்டுக்காக மட்டும் வந்திருக்கிறார், பாரீர்! என்ற எண்ணத்தை உமிழும் கண்களுடன்தான் மக்கள் இருக்கப்போகிறார்கள்.

ஒவ்வொரு துறையிலும் தமிழர்களின் முகத்தில் கரி பூசப்படும் கொடுமைக்கு யார் தலைமை வகித்திருக்கிறாரோ, அந்த நேரு இவர்தான் என்றுதான் பார்க்கப் போகிறார்கள்.

"தமிழ் மக்கள் குடிஏறி இருக்கும் நாடுகளான இலங்கை, பர்மா, மலேயா. தென்னாப்பிரிக்கா முதலிய நாடுகளில், தமிழர்கள் தூதுவர்களாக நியமிக்கப்படுவதே, பொருத்தமுடையதாகும். தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒருவர் கூட கவர்னராயில்லாவிட்டாலும், தூதுவர் பதவிகளிலாவது தமிழர்களுக்குச் சிறப்பளிக்கக் கூடாதா? உலகமெல்லாம் புதுப் புது இடங்களில் தூதுவர்கள் நியமிக்கப்பட்டு வரும்போது எங்காவது ஒரு தமிழருக்குக்கூட இடமில்லைஎன்பது வருந்தத்தக்கது. தமிழ் நாட்டு அரசியலில் காங்கிரசு கட்சியிலும், பிற கட்சிகளிலும், கட்சிச் சார்பற்ற நிலையிலும், கல்விச் சிறப்பு, கலைப் பண்பு, பிற நாட்டு அனுபவம் முதலிய தகுதிகளுடைய சிலர் கூடவா, புது டில்லி அரசினருடைய தொலை நோக்கிற்குப் புலப்படவில்லை? மேலும் தமிழர்களே மிகப் பெரும்பான்மையினராகவுள்ள புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளுக்கு ஒரு தமிழரை, இந்தியப் பிரதிநிதியாக ஏன் நியமிக்கக் கூடாது? மக்களுடைய மொழியறியாத ஒருவரை எதற்காக நியமிக்க வேண்டும்?

தம்பி! இப்படி எழுதும் ஏடு, தி. மு. க. முகாமைச் சேர்ந்தது அல்ல! மதுரை 'தமிழ்நாடு'—நேரு பண்டிதரின் விஜயத்தின்போது, இந்த ஏட்டதிபரின் மாளிகைக்குக்கூடச் செல்லக்கூடும்—வேண்டியவர்தான் ஆட்சியினருக்கு—எனினும், மனம் வெதும்பத்தான் செய்கிறது. இவர் போன்றாருக்கும், காரணம் என்ன? தொடர்ந்து தமிழர் அவமதிக்கப்பட்டு வருவது, வெளிப்படையாகவே அவமதிக்கப்படுவது, சுயநலத்தால் பீடிக்கப்பட்டுப் போனவர்களுக்குத் தவிர பிற அனைவருக்கும், மனவேதனையைத் தருவதாகத்தான் இருக்கிறது.

அந்த வேதனையை நேரு பண்டிதரின் விஜயம் போக்கிவிடாது — எரிகிற தழலுக்கு எண்ணெய்தானாகும்!

'தனி நாடு' என்று கேட்பது தவறு, தீது, தேவையற்றது என்று காரணம் காட்டி, நம்மீது கடிந்துரைக்கும் போக்கினரெல்லாங்கூட, எல்லா அதிகாரங்களும் வசதிகளும் வாய்ப்புகளும், உரிமைகளும் டில்லியில்—மத்திய சர்க்காரில் குவிந்துவிட்டிருப்பதைச் சுட்டிக் காட்டி, இது தவறு, தீது, தேவையற்றது என்று எடுத்துக்காட்டுகிறார்கள்.

இந்த நிலைமை மாற்றப்பட்டாக வேண்டும் என்று வலியுறுத்துகிறார்கள்.

மாகாணங்களுக்கு — மாநிலங்களுக்கு—இராஜ்யங்களுக்கு இன்று உள்ள அதிகாரங்கள், போதாதன; இந்த அளவுக்கு அதிகாரங்கள் குறைக்கப்பட்டுள்ளதால், அந்தந்த மாநிலங்கள் தத்தமது ஆட்சியின்கீழ் உள்ள மக்களின் செல்வ வளர்ச்சிக்கான, நல் வாழ்வுக்கான திட்டங்களை நிறைவேற்றிவைக்க முடியவில்லை என்று குறைபட்டுக் கொள்கிறார்கள்.

வடக்கு வேறு; தெற்கு வேறு என்று பேசுவது அவர்களுக்குக் கசப்பாக இருக்கிறது.

இனப் பிரச்சினையை எழுப்பினாலே, கடுப்பெடுக்கிறது.

# கேட்டுப் பார்த்தால் கெட்டுவிடமாட்டீர்!

எனினும், அவர்கள் அனைவருக்குமே எங்கோ ஓர் 'சுருதிபேதம்' இருப்பது தெரிகிறது.

அவர்கள், மாகாணங்களுக்கு அதிகமான உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்று வாதாடுவதும், வாதங்கள் பலிக்காது போனால் போராடுவதும்தான் அரசியல்; வடநாடு—தென்னாடு என்று குறிச் சொற்களைக் காட்டிப் பேசுவது 'காட்டுமிராண்டித்தனம் என்று எண்ணிக்கொள்கிறார்கள்; தம்பி, இவர்களின் அரசியலாவது வெற்றி பெறுகிறதா? அதுதான் இல்லை.

ஏற்கனவே உள்ள அதிகாரங்கள் போதாமல், மேலும் மேலும் மத்திய சர்க்காரிலே அதிகாரங்களைக் கொண்டுபோய் குவித்துக் கொள்ளும் போக்குத்தான் காண்கிறோம்.

வடக்கு—தெற்கு என்று பேசுவது அறிவுடைமை அல்ல என்று கருதும் "நகாசு" வேலைக்காரர்களையே கேட்கிறோம். அந்தப் பேதம் ஆகாது என்றால், ஏன் தமிழனுக்கு உரிமை தரவில்லை. தமிழனை ஏன் உயர் பதவியில் அமர்த்தவில்லை, தமிழனை ஏன் தூதுவர்களாக்கவில்லை என்று எப்படிக் கேட்கத் தோன்றுகிறது!

லங்காஷயர்காரருக்கே பதவியா? வேல்ஸ்காரருக்கே விருதுகளா? ஷெப்பீல்டுகாரர்களுக்கே பட்டமா? என்று இங்கிலாந்தில் கேட்பதில்லை; காரணம், அங்குள்ள மக்கள் அனைவரும் தம்மை ஆங்கிலேயர் என்று நம்புவதால்—அந்த எண்ணம் குருதியில் கலந்துவிட்டிருப்பதால்!

இங்கும் அதுபோல, நேரு பண்டிதரும், அவர் கூறுகிறாரே என்பதாலே பிறரும், அனைவரும் இந்தியர் என்று பேசுகிறார்கள்.

இந்தப் பேச்சு உண்மை உணர்ச்சியை, இயற்கையைக் காட்டுவதாக இருந்தால், அடிக்கடி பல்வேறு துறைகளிலேயும், நம்மைப் புறக்கணித்து விட்டார்கள், நமது நலன்கள் பாழாக்கப்பட்டு விட்டன; நமது உரிமைகள் அழிக்கப்படுகின்றன; என்ற குமுறல் எழக் காரணம் என்ன?

> "இன்று இந்தியாவில் எந்த இராஜ்யத்திலும் தமிழர், கவர்னராக இல்லை. இந்தியாவின் மற்றப் பகுதிகளில் கிடைக்காத பதவி தமிழருக்கு தமிழ் நாட்டிலேயாவது கிடைக்கட்டுமே.
>
> தமிழ் நாட்டுக்கு ஒரு தமிழ்க் கவர்னரை நியமிக்க வேண்டும் என்று நமது அமைச்சரவை மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்டால், டில்லியில், யாருக்கும் மூர்ச்சை போட்டுவிடாது."

தம்பி! 'குமுதம்' இதுபோல் எழுதிடக் காண்கிறேன்! ஏன், இந்த ஆவல் எழுகிறது! தமிழனுக்கு, இந்தியாவிலே எந்த இடத்திலும் கவர்னர் பதவி இல்லையே என்ற ஏக்கம் ஏன் எழுகிறது!

> தமிழருக்குத் தமிழ் நாட்டிலேயாவது

என்பதிலே தொக்கி நிற்கும் துயரத்துக்குக் காரணம் என்ன?

இந்தியர் என்று பேச முடிகிறதே தவிர, பேசுவது இன்றைய அரசியல் நாகரீகம் என்று கருதுகிறார்களே தவிர அதிலே ஆழ்ந்த நம்பிக்கையோ, பற்று பாசமோ இல்லை—இயற்கையாக எழுவதில்லை!

தமிழ் நாட்டுக்குத் தமிழர் கவர்னர் ஆகவேண்டும் என்று எண்ணச் செய்யும் உணர்ச்சிக்கு 'குமுதம்' என்ன பெயரிடுகிறதோ நான் அறியேன்! எனக்கென்னவோ, நாமக்கல் கவிஞரின் பாடல் செவியில் விழுகிறது,

> தமிழன் என்றோர் இனம் உண்டு
> தனியே அவர்க்கோர் பண்பு உண்டு

அவ்வளவு பச்சையாகச் சொன்னால், அண்ணாத்துரைக்கும் நமக்கும் ஒரு வித்தியாசமும் தெரியாமல் போய்விடுமே, நாமென்ன அவன் போலவா, அரசியலில் அந்தஸ்து குறைந்த நிலையில் இருக்கிறோம், என்ற எண்ணம், பலருக்கு உண்டு என்பதை நான் அறிந்திருக்கிறேன்.

தம்பி! இதிலே இன்னொரு வேடிக்கையைக் கவனித்தாயா?

> தமிழ் நாட்டுக்குத் தமிழ்க் கவர்னரை நியமிக்க வேண்டும் என்று நமது அமைச்சரவை மத்திய அரசாங்கத்தை கேட்டுக்கொண்டால் டில்லியில் யாருக்கும் மூர்ச்சை போட்டுவிடாது."

என்ற வார்த்தை இருக்கிறதே, அதிலே உள்ள நயங்களும், அதற்குள்ளே புதைந்துள்ள உணர்ச்சிகளும், பலமுறை படித்துப் படித்துப் பார்த்தால்தான் அறிந்து ரசிக்க முடியும.

> நமது அமைச்சரவை!

தம்பி! இதிலே, பாசமும் பரிவும், அன்பும் அக்கறையும், உரிமையும் உறவும் எல்லாம் அந்த நமது என்ற சொல்லுக்குள்ளே வைத்து இழைத்துத் தருகிறார் அந்த ஆசிரியர்! வாழ்க, அவர்தம் தமிழ் உள்ளம்!!

> நமது அமைச்சரவை, தமிழ் நாட்டுக்கு
>
> நல்லவரை
>
> திறமைசாலியை
>
> அனுபவமிக்கவரை

கவர்னராக நியமியுங்கள் என்று கேட்கவில்லை.

> தமிழ்க் கவர்னரை

நியமிக்க வேண்டும் என்று கேட்கிறார்.

இனித் தம்பி, தமிழ் நாட்டின் அவல நிலையைக் காட்டுகிறாரே, அந்தச் சுவையைப் பார்!

> தமிழ் நாட்டுக்குத் தமிழ் கவர்னரை நியமிக்கும்படி மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ள வேண்டுமாம்.

மத்திய அரசாங்கத்திடம் அந்த அதிகாரம் சேர்க்கப்பட்டிருக்கிறது எனபது விளங்குகிறது என்பாய்.

தம்பி! ரசம் அதிலே இல்லை.

> மத்திய அரசாங்கம்

என்று மட்டுமே கூற ஆசிரியரின் மனம் இடந் தருகிறது. நமது மத்திய அரசாங்கம் என்று சொல்ல கூச்சமாக இருக்கிறது. நமது அமைச்சரவை என்று, உரிமையோடும் பெருமையோடும் கூறுவதற்கு முடிகிறது. மத்திய அரசாங்கம் என்று மட்டுமே. பந்தம் சொந்தம் அற்ற முறையிலே சொல்ல முடிகிறது.

பாவி! நான் மிகப் பாடுபட்டு உள்ளத்து உணர்ச்சிகளை திரை போட்டு வைக்கிறேன், கிளறிக் கிளறிக்

கொட்டித் தொலைக்கிறாயே, தேசிய முகாமின் தீப்பொறி கிளம்புமே...என்று ஆசிரியர் ஆயாசப்படக் கூடுமே என்பது பற்றி, தம்பி, நான் பலமுறை எண்ணிப் பார்த்தேன்; என்ன செய்வது; அவருக்குக் கஷ்ட நஷ்டம் வருவதானாலும், இதனை நான் எடுத்து விளக்குவது தமிழருக்கு இலாபம் அல்லவா!!

தமிழ் நாட்டுக்கு தமிழரை கவர்னராக நியமிக்கும்படி நமது அமைச்சரவை மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ள வேண்டும் என்று யோசனை கூறியதும், ஆசிரியருக்கு வேறோர் யோசனை வருகிறது.

> நமது அமைச்சர்கள், டில்லியின்
> கோபம் கிளம்பிடும் என்று மருளக் கூடிய
> வர்களாயிற்றே! என்ற எண்ணம் வந்தது.

உடனே, நமது அமைச்சரவைக்கு தைரியம் கொடுக்கிறார்.

> மத்திய அரசாங்கத்தைக் கேட்டுக் கொண்
> டால் டில்லியில் யாருக்கும் மூர்ச்சை
> போட்டு விடாது!

என்று கூறுகிறார்!

ஏண்டா! இப்படிப் பயந்து தொடை நடுங்கியாக இருக்கிறாய்! உயிர் ஒன்றும் போய்விடாது — என்று கோழைக்கு அச்சமற்றவன் கூறுவதிலே உள்ள 'ரசம்' இதிலே இருக்கிறதல்லவா? ஆம், அண்ணா, என்பாய். தம்பி, இதனினும் மேலான 'ரசமும்' இருக்கிறது, கேள்.

அமைச்சரவையின் அச்சத்தைப் போக்கி, தைரியமாகத் தமிழ் நாட்டுக்குத் தமிழ் கவர்னர் வேண்டும் என்று கேளுங்கள், டில்லியில் யாருக்கும் மூர்ச்சை போட்டுவிடாது—என்று வீரச் சூரணம் தருகிறாரல்லவா 'குமுதம்' ஆசிரியர், அவரைப் பார்த்து.

> தமிழ் நாட்டுக்கு யார் கவர்னராவது
> என்பதைத் தீர்மானிக்கும் உரிமை ஏனய்யா
> மத்திய அரசாங்கத்திடம் இருக்கவேண்டும்?
> தமிழ் நாட்டு அரசிடமே அந்த உரிமை
> இருத்தலாகாதா? தமிழ்நாடு தனிநாடு என்ற
> நிலை ஏற்படுமானால் காவடி தூக்கும் கேவலம்
> எழாதல்லவா!—

என்று கூறிப் பார்! ஆசிரியருக்கு மூர்ச்சை போட்டு விடும்!!

ஆசிரியர்கள் நிலையே இது என்றால், அமைச்சர்கள் அச்சம் கொள்வதிலும், ஆமையாவதிலும், ஊமையாவதிலும் ஆச்சரியப்படுவானேன்!

பிரச்சினை இதுதான் தம்பி, பலருக்கும் நன்றாகத் தெரிகிறது தமிழகத்தின் தாழ்நிலையும், அதற்கான சூழ்நிலையும். உள்ளமும் குமுறச் செய்கிறது. அதனை எடுத்துக்காட்டிப் பரிகாரம் கேட்பதிலே, ஈடுபட்டால், 'உள்ளதும்' போய்விடுமோ என்றுகூட சிலர் அஞ்சுகிறார்கள். மீண்டும் காங்கிரஸ் கட்சிக்கே வெற்றி என்று இந்தத் தேர்தல் முடிவு இருக்குமானால், 'மத்திய அரசாங்க'ப் பிடி, இரும்புப் பிடியாகிவிடும் என்ற நிலைமை இருக்கிறது. இதனை நன்கு உணர்ந்துள்ள யாரும், நேரு பண்டிதரின் 'திக்விஜயத்தி'னால், தங்கள் நெஞ்சிலே மூண்டுள்ள நெருப்பை அணைத்துக்கொள்ள முடியாது. எரிகிற தழலில் எண்ணெய்தான், நேரு பண்டிதரின் பவனி!!

அண்ணன்,

அண்ணாதுரை

(16—12—56 திராவிட நாடு இதழில்)

With the best compliments from:

**Ayyappan Industries**

**TIRUPUR.**

# மனித உள்ளம்

சிறுகதை

'பேசும்மணி'

சிகிச்சைப் பெறுவதற்காக நான் ஜெனரல் ஆஸ்பத்திரியில் அட்மிட் செய்யப்பட்டேன். நர்ஸ் என்னை 30-ம் நம்பர் வார்டுக்கு அழைத்துப்போய் 'இந்த 9-ம் நம்பர் படுக்கைதான் உனது' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டார். என் படுக்கையில் உட்கார்ந்து சிறிது நேரம் கழித்து இடது பக்கமாகத் திரும்பிப்பார்த்தேன். அங்கு 8-ம் நெம்பர் படுக்கையில் ஒருவர் படுத்துக்கொண்டு என்னையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார். எதற்காக என்னை இவர் இப்படிப் பார்த்துக்கொண்டிருக்கிறார் என்று நான் நினைக்கும்போதே அவர் சிறிது புன்முறுவலுடன் "சார் எந்த ஊரோ?" என்றார்.

'திருச்சி' என்றேன் நான்.

"என்னசார் உங்கள் உடம்புக்கு? என்று அடுத்தக் கேள்வி கேட்டார்.

"சர்க்கரை வியாதி சார்" என்றேன். இதைக் கேட்டதும் அவருக்கு ஏதோ ஒருவித திருப்தி ஏற்பட்டிருக்க வேண்டும் மறுபடியும் ஒரு புன்முறுவல்.

'சாருக்கு என்ன கம்ளேண்டோ?' என்றேன் நான்.

"உப்பு வியாதி என்றார். எனக்கு இதைக் கேட்டதும் தூக்கிவாரிப் போட்டாற்போல் இருந்தது. இதுவரையிலும் நான் சர்க்கரை வியாதிப் பற்றிதான் கேள்விப்பட்டேன். உப்பு வியாதியைப்பற்றி நான் கேள்விப்பட்டதே இல்லை.

"உப்பு வியாதி ஒன்று இருக்கிறதா, அது என்ன சார்" என்றேன். இப்போது 4-ம் படுக்கையில் இதுவரையிலும் படுத்துக்கொண்டு நாங்கள் பேசிக்கொண்டிருந்ததை மௌனமாய் கேட்டுக்கொண்டிருந்தவர் "புளிப்பு வியாதி ஒன்றுதான் பாக்கியிருக்கிறது, அதையும் இந்த டாக்டர்கள் சீக்கிரமாய் கண்டுபிடித்து விடுவார்கள்" என்று சிறிது எரிச்சலுடன் கூறினார்.

"தங்களுக்கு என்ன சார் உடம்புக்கு?" என்றேன்.

"எனக்கு இரத்த அழுத்தமாம். அரிசியே சாப்பிடக்கூடாதாம். டாக்டர் சொல்லுகிறார்" என்றார்

'ரொம்ப நல்லதாப் போச்சு" என்றேன்,

"ஏன் சார் அப்படிச் சொல்லுகிறீர்?" என்று வருத்தத்துடன் கேட்டார் அடுத்தவர்.

"இப்போது நாட்டில் அரிசி எங்கு இருக்கிறது? டாக்டர் அரிசி சாப்பிடு என்று உங்களைச் சொல்லுவதற்கு. இப்போது மக்களுக்கு முக்கிய கவலை அரிசி கிடைக்கவில்லை என்பதுதான். உங்களுக்கு அந்தக் கவலை இருப்பதற்கு அவசியமில்லையல்லவா? என்றேன்.

"சரியாப்போச்சு! மனிதன் உப்பு சாப்பிடக்கூடாது, சர்க்கரை சாப்பிடக்கூடாது, அரிசியும் சாப்பிடக்கூடாது, இன்னும் எதைதான் அவன் சாப்பிட்டு உலகத்தில் வாழ்வது? இதெல்லாம் சாப்பிடாமல் அவன் எதற்குத்தான் வாழணும்?" என்றார்,

"இந்த நோய்களெல்லாம் இல்லாவிட்டால் மனிதனையே கட்டுப்படுத்த முடியாது" என்றார் 5-ம் நெம்பர் படுக்கையில் உட்கார்ந்து கொண்டு மூச்சுவிடத் திணறிக் கொண்டிருந்தவர்.

"தாங்களுக்கு என்ன கம்பளேண்டோ சார்?" என்றேன்.

"என்னைப் பார்த்தாலேயே தெரியவில்லையா? நான் ஒரு மாஜி மேடைப் பேச்சாளன் என்று. ஒரு நாளைக்கு எட்டு மேடைகளில் பேசுவேன், கொள்கைக்கு அல்ல பிழைப்புக்காகத்தான். இப்போது உட்கார்ந்துவிட்டேன். இந்த ஆஸ்மா நோயைத் தவிர வேற எதுவும் என் மேடைப் பேச்சை தடுத்திருக்க முடியாது" என்றார்.

அதுவும் உண்மைதான். முந்தி எல்லாம் வியாதிகள் பெரும்பாலும் பணக்காரர்களுக்குத்தான் வரும். இப்போதென்னடா என்றால் ஏழைகளுக்குத்தான் அதிகமாக வருகிறது என்றேன். அப்போதெல்லாம் ஏழைகள் ஏழைகளாக வாழ்ந்தார்கள் இப்போது ஏழைகள் பணக்காரர்கள் போல் வாழ்க்கையில் நடிப்பதால் தான் சார்" என்றார் ஆஸ்மா பேர் வழி.

"அவர் சொல்வதில் செண்ட் பர் செண்ட் உண்மையாயிருக்கிறது சார்" என்றது உப்பு வியாதி.

"அவர்தான் மாஜி மேடைப்பேச்சாளராச்சே உண்மையில்லாமலாயிருக்கு" மென்றேன். இதைக்கேட்டதும் எல்லா வியாதிகளும் சிரித்தன. அப்போது "ஓ" "ஹா" என்று அலறும் சப்தம் பக்கத்து வார்டிலிருந்து வந்தது. எனவே பேச்சை நிறுத்திவிட்டு அங்குப் போய் பார்த்தேன். பத்து வயது சிறுவன் ஒருவன் படுக்கையில் அப்படி அலறிக்கொண்டிருந்தான். அச்சிறுவனின் தாயும், தந்தையும் கண்ணீர் வடித்த வண்ணம் அவனருகில் நின்றுக்கொண்டிருந்தனர். டாக்டர் ஏதோ சிகிச்சை அளித்துக் கொண்டிருந்தார். சிறிது நேரம் கழித்து அச்சிறுவனின் தந்தையை "குழந்தைக்கு என்ன வியாதி?" என்றேன்.

க்டுமர், (Tumar) மூளையில் ஏதோ சதை வளர்ந்திருக்கிறதாம்" என்றார்.

'இந்தக் குழந்தைக்கா இந்த வியாதி வரவேண்டும்! இது பணக்காரர்களுக்கு வந்தாலே செலவைத் தாங்க முடியாதே" என்றேன்.

"அதை ஏன் சார் சொல்லுகிறீர்கள்? இதுவரையிலும் ஐந்து ஆயிரம் செலவு செய்து ஆச்சு. எனக்கிருந்த ஐந்து ஏக்கர் நிலத்தில் பாதி நிலத்தையும் விற்றுவிட்டேன். நிலம் போனதைப் பற்றியோ, பணம் செலவானதைப் பற்றியோ கவலைப் படவில்லை இவ்வளவு செய்தும் குழந்தை குணமாகவில்லையே. அது தான எனக்குக் கவலை. அவன் நல்லபடிக்கு சந்தோஷமாக விளையாடிக் கொண்டிருந்தாலே போதும். அடுத்த வெள்ளிக்கிழமை ஆப்பரேஷன். வெளிநாட்டு ஸ்பெஷலிஸ்ட் வருகிறாராம். அவர்தான் ஆப்பரேஷன் செய்யப் போகிறாராம். ஆப்பரேஷனுக்கு அந்த ஸ்பெஷலிஸ்ட்டுக்குகாக ரூ. 2000- கட்டிவிட்டேன். என்று அவர் சொல்லும்போதே கண்களில் நீர் தாரையாக ஒழுகிக்கொண்டிருந்தது,

"வருத்தப்படாதீங்க சார், எல்லாம் நல்லபடிக்குச் சரியாகிவிடும். இப்போதெல்லாம் ஆப்பரேஷன் என்றால் பயப்பட வேண்டியதில்லை. அந்த அளவுக்கு விஞ்ஞானம் முன்னேறியிருக்கிறது" என்றேன்.

"என்ன முன்னேறி என்ன சார் பிரயோசனம்? குழந்தையின் தலை

யில் துவாரம் செய்தோ அல்லது பிளவுபடுத்தியோ தான் ஆப்பரேஷன் செய்ய வேண்டுமாம், வேறு வழி இல்லையாம். இல்லாவிட்டால் குழந்தை ஒரு மாதத்திற்குப் பிறகு நிச்சயம் உயிரோடு பார்க்க முடியாதாம். ஆப்பரேஷன் செய்தால் ஒரு வேளை பிழைக்கலாம். இப்படிப்பட்ட ஆப்பரேஷனில் எதையும் நிச்சயம் சொல்ல முடியாது" என்று டாக்டர் சொல்லிவிட்டார். வேறு வழி இல்லை என்று ஒப்புக்கொண்டேன். அந்த ஆப்பரேஷனை நினைக்கும்போதே என் மனம் வேதனைப்படுகின்றது என் மனைவியோ அதை நினைக்கும்போதெல்லாம் மயக்கம் போட்டு கீழே விழுந்துவிடுகிறாள். அவள் சரியாகச் சாப்பிட்டே ஒரு மாதமாகிறது சார்" என்றார்.

"என்ன உலகமோ சார் குழந்தைக்கு போயும் போயும் இப்படிப்பட்ட வியாதியா வரவேண்டும்? மனிதனைப் படைத்தவுடன் கடவுள் இந்த வியாதிகளையும் படைத்து அவைகளுக்கு மருந்துகளையும் படைத்திருக்கிறார். அவருடைய படைப்பிலுள்ள இரகசியம் தான் என்னவோ" என்றார் இரத்த அழுத்தப் பேர்வழி.

"நாம் வருத்தப்பட்டு என்ன சார் பயன்? யார் யார் எதை அனுபவிக்கணுமோ அதை அனுபவித்துதான் தீரணும். நம் நாட்டில் ஒரு திறமை மிக்க நீதிபதி இருந்தாராம். அவர் சில வழக்குகளை ஒருமுறைப் படித்துவிட்டு வழக்கறிஞர்கள் தங்கள் வாதத்தை ஆரம்பித்த சிறிது நேரத்திற்குள் வழக்கு சம்பந்தமான முடிவை எழுதிவைத்துக் கொள்வாராம். அதற்குப் பிறகும் வழக்கறிஞர்கள் பாயிண்டு பாயிண்டுகளாக எடுத்து மேஜைகளைத் தட்டியும் கைகளை மேலும் கீழும் உயர்த்தியும் உரக்கப் பேசி வாதாடுவார்களாம். இதை எல்லாம் கவனித்துக் கொண்டு அந் நீதிபதி மௌனமாகயிருப்பாராம். காரணம் வழக்கறிஞர்கள் அவர்கள் திருப்திக்காக அப்படியே பேசிவிட்டுப் போகட்டும் என்பதே. அதே போன்று நம்முடைய வாழ்க்கையின் முடிவு இது தான் என்று ஒருவர் தீர்மானித்து எழுதிவிட்டிருக்கிறார். நாம் செய்யும் முயற்சியும், டாக்டர்களின் முயற்சியும் நம்மை நாமே திருப்தி செய்து கொள்வதற்காகத்தான், வேறொன்றுமில்லை" என்று இத்தனை நேரமும் எங்கள் பேச்சில் கலந்துகொள்ளாமலிருந்து வந்த 1-ம் நெம்பர் படுக்கையிலிருந்த வயிற்று வலிக்காரர் வேதாந்தம் பேசினார்.

இரண்டு நாட்கள் கழிந்தன. சிறுவனின் கத்தல் அதிகமாயிற்று. அவன் தாய் பகலெல்லாம் அவன் பக்கத்தில் இருந்துகொண்டு அவனுக்கு உபசரணை செய்துக் கொண்டு கண்ணீர் வடித்த வண்ணம் இருந்தார். அவ்வம்மையார் முற்றும் துறந்த துறவியைப்போல் காணப்பட்டார். "அவள் இப்போதெல்லாம் சாதமே சாப்பிடுவதில்லை சார். வெறும் பாலிலே உயிரை வைத்திருக்கிறாள்." அவளைப் பற்றிய நிலைமை வேறு என்னை பயமுறுத்துகிறது. என்ன ஆகுமோ என்று" கண்ணீரும் கவலையுமாய்க் கூறினார் சிறுவனின் தந்தை.

பகலில் தாயும் இரவில் தந்தையும் மாறி மாறி ஷிப்ட் போட்டுக் கொண்டு பையனைக் காத்து வந்தனர். அவரும் உருவத்தில் ரிஷியாகவே மாறிவிட்டார். அவர் காலையிலும் அவர் மனைவி மாலையிலும் கோயிலுக்குப் போய் அபிஷேகம் செய்யாத கோயில் இல்லை. இரண்டு வேளையும் எங்களுக்குக் கோயில் பிரசாதம் தவறாமல் தந்துவந்தனர், எங்கள் நோயை நாங்கள் மறந்துவிட்டோம். சிறுவனைப் பற்றிய கவலையே எங்களைச் சூழ்ந்துக் கொண்டது. இரவும் பகலும் எங்களுக்கு அவனைப் பற்றியப் பேச்சுதான், ஒரு நோயாளி மனிதன் தன்னைவிட அதிக நோய்ப்பட்டிருப்பவனிடம் பரிதாபம் கொள்கிறான், அன்பு காட்டுகிறான். இது மனிதனுடைய புனிதத் தன்மையாகும். இது போன்றே ஒவ்வொரு மனிதனும் தன்னைவிட அதிக வறுமையில் இருக்கும் மற்றொரு மனிதனிடம் பரிதாபத்தையும் அன்பையும் காட்டி உதவினால் உலகத்தில் சர்ச்சைகள் தான் தோன்றுமா, கட்சிகளின் எண்ணிக்கைதான் பெருகுமா? பஞ்சம் பட்டினிதான் ஏற்படுமா? நாசத்தை விளைவிக்கும் கொடுமையான போர்கள்தான் மூளுமா? அந்த புனித உணர்ச்சி மனிதனுக்கு என்றுதான் உண்டாகுமோ!

அடுத்த வெள்ளிக் கிழமையும் வந்துவிட்டது. காலையில் ஆப்பரேஷன் 7 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. எல்லோரும் ஆவலாகக் காத்திருந்தோம். மாலை நான்கு மணிக்கு ஒரு டாக்டர் மெதுவாகக் கதவைத் திறந்துகொண்டு வெளியே சோக முகத்துடன் வந்தார். நாங்கள் என்ன முயற்சித்தும் பையனைக் காப்பாற்ற முடியவில்லை சார்" என்றார். டாக்டரின் முகத்தைப் பார்த்ததுமே அவ்அம்மையார் மயக்கம் போட்டுக் கீழே விழுந்துவிட்டார். டாக்டர்கள் சிகிச்சை செய்ய விரைந்து வந்தனர். நான் அவரைத் தாங்கிக் கொண்டேன். என் தோளின் மீது அவர் தலையை வைத்துக் கொண்டு விம்மி விம்மி அழுதார். நான் அவருக்குத் தேறுதல் சொன்னேன் "சார் நீங்கள் ஒரு ஆண் பிள்ளை. நீங்களே இப்படி அழுதால் உங்கள் மனைவியின் நிலைமை என்னவாகும். நீங்கள் தைரியமாக இருந்து உங்கள் மனைவிக்கு ஆறுதல் சொல்லவேண்டும். மனத்தை மிகவும் சோகத்தில் ஆழ்த்திவிடாதீர்கள். உங்களுக்குக் கடைசியாக நான் ஒன்று சொல்லுகிறேன். தயவுசெய்து தவறாக எடுத்துக் கொள்ளாதீர்கள். உங்களுக்கு இருந்த ஒரே அன்பு மகன் போய்விட்டான். வேறு குழந்தையும் உங்களுக்குக் கிடையாது என்கிறீர். பெற்றால்தான் பிள்ளையா? எத்தனையோ பெரியோர்கள் பிறருடைய குழந்தைகளை எடுத்துத் தங்கள் பிள்ளைகளாகப் பாவித்து வளர்த்து வாழ்க்கையை அநுபவித்திருக்கிறார்கள். உம் மகனை மறந்து உம்மை தேற்றிக்கொள்ளவும் உம் மனைவியார் மகனின் பிள்ளைப் பாசத்திலிருந்தும், துயரத்திலிருந்தும் உங்களோடு உலகில் வாழ்வதற்கும் நீங்கள் யாருடைய குழந்தையாவது ஒன்றை எடுத்து வளர்ப்புப் பிள்ளையாக வளர்ப்பது மிகவும் நல்லதாக இருக்குமென்றேன்.

"அதை ஏன் சொல்லுகிறீர்கள். கல்யாணமாகி இருபது வருடங்களாகியும் பிள்ளைப்பேறு கிடைக்காத நாங்கள் ஊர் பேர் தெரியாத ஓர் திக்கற்ற குழந்தையை எடுத்து வளர்த்தோம். அந்தக் குழந்தைதான் சார் இவன்" என்றார்.

அப்படியே அசந்து திக்பிரமை பிடித்தவன்போல் வாயடைத்து நான் நின்றுவிட்டேன். இவர்களுக்கு உபதேசம் செய்ய நான் முயன்றதைக் குறித்து வெட்கித் தலை குனிந்தேன். ஊர் பேர் தெரியாத ஓர் வளர்ப்புப் பிள்ளை இடத்தில் இவர்கள் காட்டியது கடமையா! அன்பா பரிதாபமா! அல்லது பாசமா!? எது என்று சொல்ல முடியும்? யார் இதற்கு எப்படிப் பெயர் கொடுத்து அழைத்தாலும் நான் இதை மனித உள்ளம் என்று சொல்லுவதைவிட வேறு என்ன சொல்ல முடியும்?

★

# வங்கச் சம்பவம்-ஒரு பிரச்னை?

## சுக்லாவின் செயல் நீதிமன்ற அவமதிப்பே!



### நாடாளுமன்றத்தில் இரா. செழியன் பேச்சு!

“மேற்கு வங்கச் சட்டமன்றத்தில் போலீசுக்காரர்கள் நுழைந்து அட்டகாசம் புரிந்ததை நாம் அனைவரும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

சட்டமன்றத்தின் சிறப்பும் தூய்மையும் கெடும்வகையில் நடைபெற்ற வன்முறை நுழைவு பற்றி இரண்டுவிதக் கருத்துக்கள் இருக்க முடியாது.

சட்டமன்றம் நடக்குமிடத்தில் நடைபெற்ற தாக்குதலாக மட்டுமல்ல—சட்டமன்ற சனநாயக முறையின்மீது—இந்திய சனநாயக உணர்வின்மீது நடைபெற்ற தாக்குதலாகும்.

மேற்கு வங்கச் சட்டமன்றத்தில் போலீசார் நடத்திய அமளியை எல்லாக் கட்சியினரும் — எல்லாக் கொள்கையினரும் கண்டித்துள்ளனர்; மேற்கு வங்க முதலமைச்சரும், துணை முதலமைச்சரும் கண்டித்துள்ளனர்.

சட்டத்தைக் காப்பாற்ற வேண்டியவர்கள், சட்டம் இயற்றப்படும் இடத்தை அவமதிக்க முனைந்தது, எவராலும் மன்னிக்க முடியாத ஒன்றாகும்.

இந்த விவாதத்தைத் தொடங்கிய திரு. ஹேம்பருவா அவர்கள், ‘கூட்டணி அரசாங்கத்தின் கீழ் இந்த அட்டகாசம் நடைபெற்றது; நாளை வேறு எந்த அரசாங்கத்திலும் அது போல் நடைபெறலாம்’ என்று கூறினார்.

எந்த அமைச்சரவையின் ஆட்சியின் போது அது நடைபெற்றது—எந்த மாநிலத்தில் நடைபெற்றது—என்று பார்ப்பதைவிட, அத்தகைய அடாத செயல் எங்கு நடைபெற்றிருந்தாலும், காங்கிரசு ஆட்சியாயினும் சரி—கம்யூனிஸ்டு ஆட்சியாயினும் சரி — அதை அனைவரும் கண்டிக்கவேண்டும்.

இந்தக் குறிப்பிட்ட நிகழ்ச்சியைப் பற்றி நாம் விவாதிக்கும்போது, நாம் ஒன்றைமனத்தில் வைத்துக்கொள்ள வேண்டும்; நமது பேச்சுக்கள், குற்றச்சாட்டுகள் — விமரிசனங்கள், மாநில விவகாரங்களில் தலையிடுவதாக ஆகக்கூடாது. சட்டமன்றத்தில் போலீசார் நுழைந்ததைக் கண்டிப்பதுடன் நில்லாமல், அங்குள்ள அமைச்சரவை-அமைச்சர்கள்-சட்டமன்றத் தலைவரின் போக்கு—என்று விரிவான ஆராய்ச்சிகளில் இறங்குவது சரியல்ல!

நிகழ்ச்சிக்குப் பின்னணி எனத் துவங்கி, மாநில விவரங்கள் முழுவதையும் பேசிவிடுவது, தேவையற்ற—முறையற்ற குறுக்கீடாகும்.

இதே பிரச்சினையில் இரண்டு நாட்களுக்குமுன், ஒரு கவனஈர்ப்புத் தீர்மானத்துக்குப் பதில் தந்த உள்துறை அமைச்சர் திரு. சவான் அவர்கள், ஒன்றைக் குறிப்பிட்டார்கள்; ‘மத்திய—மாநில உறவுகளை மனதில் வைத்துக்கொண்டு, நமது பேச்சுகள் இருக்கவேண்டும்’ என்று உள்துறை அமைச்சர் கூறியதை இங்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

மேற்கு வங்க அரசாங்கத்தை ஆதரிப்பதற்காகவோ, அங்கு நடைபெறும் ஒவ்வொன்றும் சரியானது என்று வாதிடவோ நான் முன்வரவில்லை; நடைபெற்ற நிகழ்ச்சியை முழுமையாக விவாதிக்க — அதன் பேரில் முடிவுகள் எடுக்கவேண்டிய பொறுப்பு மேற்கு வங்க சட்டமன்றத்தைச் சேர்ந்ததாகும்; மாநிலத்தைப் பொறுத்த ஒரு சம்பவத்தில் —மாநிலத்தின் சட்ட—ஒழுங்கு—அதிகாரம் ஆகியவற்றுக்குக் கட்டுப்பட்ட விவகாரத்தில்—மத்திய அரசு தலையிட முயலுவது சரியல்ல.

ஒவ்வொரு மாநிலத்திலும் உள்ள ஒவ்வொரு நிலைமையையும் ஆராய மத்திய அரசோ, இந்தமாமன்றமோ முற்பட்டால், பிறகு அரசியல் சட்டத்தில் உள்ள மாநில அரசின் முக்கியத்துவம் கேலிக்குரியதாக ஆகிவிடும்.

எல்லாவற்றையும் இங்கிருந்து கவனிக்கவேண்டும்’ என்று துவங்கினால், கூட்டாட்சி முறை என்பது அகற்றப்பட்டு — மத்திய அரசு — மாநில அரசு என்ற வரையறை அழிக்கப்பட்டு, ‘மத்திய அரசு ஒன்று மட்டும் இருந்தால் போதும்’ என்று ஆகிவிடும!

மேற்குவங்கச் சட்டமன்றத்தில் போலீசார் நுழைந்ததைக் கண்டிக்க ஆரம்பித்தவர்கள் அங்குள்ள அமைச்சரவை—அமைச்சரவையில் உள்ள கட்சிகள் — கட்சிகளின் நடவடிக்கைகள் என்று விரிவாகப் பேசத் தலைப்பட்டுவிட்டார்கள்.

இதேபோல், மேற்கு வங்க சட்டப் பேரவையில் உள்துறை அமைச்சர் சவானைப்பற்றி விவாதிக்க அல்லது நாடாளுமன்ற அவைத்தலைவர் நடந்துகொண்ட முறைபற்றிப் பேச ஒரு விவாதம் வந்தால் எப்படி இருக்கும்?

மத்திய அரசைப்பற்றி — மத்திய நாடாளுமன்ற த்தைப்பற்றி —மாநிலச் சட்டப் பேரவை விவாதம் நடத்துவதை நாம் ஏற்றுக்கொள்வோமா?

இரண்டு நாட்களுக்கு முன்பு, புதுச்சேரி சட்டமன்ற உறுப்பினர்—தி. மு. கழகத்தைச் சேர்ந்தவர் — என்னைப் பார்த்தபொழுது, ‘மத்திய அமைச்சர் ஒருவரைப்பற்றிபுதுச்சேரி சட்டமன்றத்தில் நான் விவாதம் செய்யப்போகிறேன்’ என்றார். ‘அது உரிமை பிரச்சினையாகிவிடும்’ என்று தடுத்தேன்; ‘மாநில அமைச்சரைப் பற்றி மத்திய அமைச்சர்கள் தாறுமாறாகப் பேசும்பொழுது, மத்திய அமைச்சர்களைப்பற்றி நாங்கள் பேசக் கூடாதா?’ என்று அவர் கேட்டார்; பிறகுதான் எனக்கு முழு விவரமும் வந்தது.

மத்திய—மாநில உறவுகளை மனதில் வைத்து, நாம் நிதானமாகப் பேசவேண்டும்' என்று உள்துறை அமைச்சர் சவான் கூறுகிருர்; ஆனுல் அந்த அறிவுரையை அவருடைய துணை அமைச்சர் திரு. சுக்லா ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. நாடாளுமன்ற மேலவையில் அண்மையில் திரு. சுக்லா அவர்கள் புதுவை அமைச்சர் திரு. இராமசாமி பற்றிக் கடுமையான ஒரு குற்றச்சாட்டை—களங்கத்தைக் கற்பித்துள்ளார்; திரு. சுக்லா கூறியதாவது:—

"புதுச்சேரி உள்துறை அமைச்சர் ஒரு கொலை வழக்கில் சம்பந்தப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது."

கொலை வழக்கு—ஓர் அமைச்சர் அதில் சம்பந்தப்பட்டுள்ளார்; இது உண்மையானதாக இருந்தால், மிகக் கடுமையான குற்றமாகும்.

ஆனுல் இரண்டு நாட்கள் கழித்து அதே அமைச்சர் சுக்லா அவர்கள் மாநில அவையின் முன் வந்து,

> "நான் கூறியது தவறு; நான் கூறியதைத் திரும்பப்பெறுகிறேன் கொலை வழக்கில் அவர் சம்பந்தப்பட்டதாக இல்லை—நான் கூறிய தவறுக்கு மன்னிக்கவும்; ஏதோ—கலவரம், வழக்கு அவ்வளவுதான்"

என்று கூறியிருக்கிருர்.

கொலையில் ஓர் அமைச்சர் சம்பந்தப்பட்டதாகக் கூறிவிட்டு, பிறகு அதைமறுக்கிருர் மத்திய அமைச்சர்! எவ்வளவு பெரிய குற்றச்சாட்டு—எவ்வளவு சுலபமாக அதை கூறிவிட்டார்!

அந்தக் குற்றச்சாட்டை அவர் திரும்பப்பெறும் வரையில், புதுவை அமைச்சரைப் பற்றி எவ்வளவு தவருன—கேவலமான மதிப்பீடு இருந்திருக்கும்!

ஆதாரமில்லாத— அப்பட்டமான உண்மை இல்லாத ஒரு கற்பனையை, மாற்றுக் கட்சி அமைச்சர்மீது, உள்துறை அமைச்சர் திரு. சுக்லா எவ்வளவு துணிந்து கூறிவிட்டார்?

வாய் தவறி ஏதோ வந்துவிட்ட ஒரு குற்றச்சாட்டு அல்ல அது! முன்னதாகத் தயாரித்து—எழுதி—அவையில் படிக்கப்பட்ட ஒரு அறிக்கை அது!

அந்த அறிக்கையில் மற்ருெரு பயங்கரக் கருத்து இருக்கிறது; திரு. சுக்லா கூறுகிருர்:—

> "இதைப் பற்றித் தீர விசாரணை செய்ய ஒரு தனிப்பட்ட பகுதியை நியமிக்க நாங்கள் யோசித்துக் கொண்டிருக்கிருேம்; விசாரித்ததும், நீதிமன்றத்தில் வழக்குப் போடலாம்; நீதிமன்றத்தில் நீதி கிடைக்காது என்ருல், வேறு நடவடிக்கைகள் பற்றி யோசிப்போம்."

குற்றச்சாட்டு உண்மை என்ருல், நீதிமன்றத்தில் வழக்குத் தொடருவதுகூட சரியாகப்படலாம்; ஆனுல் அமைச்சர் கூறுகிருர்:—

> "நீதிமன்றத்தில் நீதி கிடைக்காது என்ருல், வேறு நடவடிக்கைகள் எடுப்போம்."

நீதிமன்றத்தில் நீதி கிடைக்காது என்று மத்திய அமைச்சர் நினைக்கலாமா? நீதிமன்றத்தைப் பற்றி அவருக்கு ஏன் இந்த அவநம்பிக்கை?

நீதிமன்றத்தை அவமதிப்பதாக அல்லவா அந்த அமைச்சரின் பேச்சு இருக்கிறது!

"வேறு நடவடிக்கைகள் எடுப்போம்" என்று அமைச்சர் கூறுகிருரே—அது என்ன நடவடிக்கைகள்?

அவசரச் சட்டத்தைப் பயன்படுத்தலாம் — அமைச்சரவையைக் கலைக்கலாம் — புதுச்சேரியில் குடியரசுத் தலைவர் ஆட்சியைக் கொண்டு வரலாம்—இந்த முறைகளைத்தான், 'வேறு நடவடிக்கைகள் என்று அமைச்சர் சுக்லா கூறுகிருர் போலிருக்கிறது!

'நெருக்கடி நிலைமை' என்று பிரகடனம் செய்வது, பெரும்பாலும் நாட்டின் நெருக்கடியைக் குறித்து அல்ல—காங்கிரசின் நெருக்கடியை வைத்துத்தான்!

புதுச்சேரி விவகாரத்தைப் பற்றி ஒன்று குறிப்பிட விரும்புகிறேன்; புதுச்சேரியில் எந்தக் கொலையும் அண்மையில் நிகழவில்லை—எந்த அமைச்சரும் அதில் சம்பந்தப்படவில்லை!

நடைபெற்றுள்ளது, உண்மையைக் கொலை செய்த ஒன்றுதான்!

அந்தக் கொலையைச் செய்தவர்—மத்திய அமைச்சர் சுக்லா!

நாடாளுமன்றம் தரும் பாதுகாப்பு உரிமைகளை வைத்துக்கொண்டு அவர் அந்தக் கொலையைச் செய்திருக்கிருர்!

நம்முன் உள்ள அடிப்படைப் பிரச்சினைக்கு வரலாம். மேற்கு வங்க சட்டமன்றத்தில் போலீசாரின் பலாத்கார நுழைவைக் கண்டிக்கும் பொழுது. மாநில உரிமைகளில் நாம் தலையிடக் கூடாது.

அந்தக் கிளர்ச்சியின் காரணம் என்ன — யார் தூண்டினுர்கள் — அமைச்சர்களுக்கு எதிரான சதியா —என்பன போன்றவற்றை மாநில அரசாங்கமே விசாரித்துத் தெரிந்து கொள்ள வேண்டும்.

மாநில அரசாங்கம் தவறினுல், அதைக் கவனிக்க மாநில சட்டமன்றம் இருக்கிறது; அவற்றை மேலும் கவனித்துக்கொள்ள மாநில மக்கள் இருக்கிருர்கள்!

அரசியல் சட்டத்திற்கு விரோதமான ஒரு செயல் நடைபெற்ருல் கூட, அதைக் கவனிப்பதாக நினைத்துக்கொண்டு, நாமும் ஓர் அரசியல் சட்ட விரோதமான செயலில் ஈடுபடக்கூடாது. அரசியல் சட்டப்படிக் கவனிக்க வேண்டியவர்கள் அதைக் கவனித்துக் கொள்வார்கள்.

துணைத் தலைமை யமைச்சராக இருந்த மொரார்ஜி தேசாய் அவர்கள், கல்கத்தாவிற்குச் சென்ற பொழுது, 'கூட்டணி அமைச்சரவையை நாங்கள் கவனித்தபடி இருக்கிருேம்' என்று கூறியிருக்கிருர்.

மத்திய அமைச்சராக இருப்பவர், எல்லா மாநில அமைச்சரவைகளையும் கவனிக்க வேண்டியதுதான்; ஆனுல், மேற்கு வங்க அமைச்சரவையை மட்டும் தனியாகக் குறிப்பிடுவதன் அர்த்தமென்ன? மாநில அமைச்சரவைகளை யெல்லாம் கண்காணிக்க இவர் என்ன—ஒரு தனிப்பட்ட போலீசுக்காரரா?"

✶

ஆசிரியர், வெளியிடுபவர் சி.என்.ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்-3